Registered as a Newspaper

பக்கங்கள் - 16

விலை - ரூபா 50

# உதயன்

புதன்பொய்கை

சுடர் : 39

கதிர் : 304

புதன்கிழமை

25 செப்ரெம்பர் 2024

முச்சந்தி முரளி



"அப்ப இனி தொடர்ச்சியா பரபரப்பு பட்டாசுகள் வெடிக்கப்போகுது கண்டியளோ"



நேற்று நள்ளிரவுடன்

# நாடாளுமன்று கலைப்பு நவம்பர் 14 தேர்தல்

கொழும்பு, செப்ரெம்பர் 25

ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் நேற்று இரவு ஜனாதிபதி அநுரவால் கலைக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி பொதுத் தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

15

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான

## வல்லாதிக்க மோதலுக்குள் நான் சிக்கிக்கொள்ளேன்!

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான புவிசார் அரசியல் மோதலில் சிக்குப்படுவதற்கு இலங்கை விரும்பவில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரி

15

## தேர்தலில் ரணில் போட்டியிடார்!

கொழும்பு, செப். 25

பொதுத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார், தேசியப் பட்டியல் ஊடாகவும் நாடாளுமன்றத்துக்கு வரமாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக வருகின்ற பொதுத்தேர்தலில் எதிரணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒருமித்த சக்தியாக

15



## பிரதமராக ஹரிணி நேற்றுப் பதவியேற்பு

கொழும்பு, செப். 25

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் இலங்கையின் பிரதமராக நேற்றுப் பதவி

15

வெளிவிவகார அமைச்சராக

## விஜித ஹேரத் நியமனம்!

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி அநுரவால் இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக விஜித ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

15

## பிரதமர் வேட்பாளர் நான் மட்டும்தான்!

சஜித் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதமர் வேட்பாளர் நான்தான். இது கட்சி எடுத்த ஒருமித்த முடிவு. இதில் எவ்வித மாற்றமும் வராது - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15



## வடமாகாண ஆளுநராக வேதநாயகன்!

இன்று பதவியேற்கிறார்

யாழ்ப்பாணம், செப். 25

வடமாகாண ஆளுநராக நா.வேதநாயகன் இன்று மு.ப. 10 மணிக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் பதவியேற்கவுள்ளார்.

15

## வடக்கு மாகாணத்தின் நிர்வாகங்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 25

வடக்கு மாகாணத்தில், மாவட்டச் செயலர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாக அலகுகளிலும் பெரியளவில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன என்று தெரியவருகின்றது.

15

ரணிலின் பாணியில்

## நிதி அமைச்சு அநுரவின் வசம்

கொழும்பு, செப். 25

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்பு அமைச்சுக்கு மேலதிகமாக நிதி அமைச்சையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளார்.

இதன்படி, பாதுகாப்பு, நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை நடைமுறைப் படுத்தல், திட்டமிடல், சுற்றுலா,

15

தமிழரசுக் கட்சியின்

## மத்திய செயற்குழு அடுத்தவாரம் கூடும்

யாழ்ப்பாணம், செப். 25

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக முன்னெடுக்க வேண்டிய நகர்வுகள் தொடர்பாக இதன்போது ஆராயப்படவுள்ளன. 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், இலங்கைத் தமிழரசுக்

15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் உண்மையைக் கண்டறிவேன்!

## பேராயரிடம் அநுர உறுதியளிப்பு

கொழும்பு, செப்.25

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவும் மற்றும் உண்மையை வெளியே கொண்டுவரத் தேவையான அடித்தளத்தை தயார் செய்ய முடிந்த அனைத்தையும் செய்வேன் என்று புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்றுமுன்தினம் கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையைச் சந்தித்து ஆசிபெற்றார்.

இதன்போது இலங்கையின் பெரும்பான்மையான மக்களின் விருப்பத்தினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் தேவையான மாற்றத்தை ஏற்படுத்தும் பொறுப்பை நாட்டு மக்கள் அவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது பொறுப்பு வாய்ந்த மற்றும் கடினமான பணியாக இருக்கலாம். அதற்காக அவருக்கு நாம் முழு ஆதரவையும் ஆசிகளையும் வழங்குவோம் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் குறிப்பிட்டார்.

அதற்கு அநுரகுமார திஸாநாயக்க உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவும் மற்றும் உண்மையை வெளியே கொண்டுவரத் தேவையான அடித்தளத்தை தயார் செய்ய முடிந்த அனைத்தையும் செய்வதாக ஜனாதிபதி தனக்கு உறுதியளித்ததாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார். (ச-சி)

# அரசியலுக்கு முற்றுப்புள்ளி

## அலி சப்ரி தெரிவிப்பு



கொழும்பு, செப்.25

எதிர்பாராத பல சவால்களை எதிர்கொண்டு கரடுமுரடான பாதையில் பயணித்து நாட்டை ஒரு ஸ்திரத்தன்மைக்குக் கொண்டு வந்துவிட்ட பெருமையுடன் எனது அரசியல் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டுவரவுள்ளேன் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிய அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் தனது சமூக ஊடக பதிவில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2019 ஆம் ஆண்டு நான் அரசியலில் காலடி எடுத்துவைத்தபோது எனது நாட்டுக்குச் சேவைசெய்ய குறிப்பாக நீதியமைச்சை சீர் செய்வதில், எனது வாழ்நாளின் பெரும்பகுதியை நான் அர்ப்பணித்த துறையில், ஒரு தெளிவான பார்வையால் உந்தப்பட்டேன்.

கொரோனா பெருந்தொற்றும், அதன் பின்னர் உக்ரைனில் வெடித்த போரும், அதன் தீவிரமான நீண்டவிளைவுகளும், சர்வதேச ஸ்திரதன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தின. இது எங்கள் நாட்டின் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடிக்கு வழிவகுத்தது. நாம் நினைத்துப் பார்க்கமுடியாத வகையில் எங்களின் மீள் எழும் திறனை சோதனை செய்தது.

இந்தக் கடினமான காலங்களில் எனக்கு பல பதவிகளில் சேவையாற்றுவதற்கான கௌரவம் கிடைத்தது. நீதியமைச்சராக, நிதியமைச்சராக இறுதியாக வெளிவிவகார அமைச்சராக என்னால் முடிந்தளவுக்கு சிறப்பாகச் செயற்பட்டேன்.

தற்போது அரசியல் வாழ்க்கையிலிருந்து விலகும் இந்தத் தருணத்தில் எனது முதல் ஆர்வமான சட்டத்துறையில் மீண்டும் ஈடுபடுவது குறித்து எதிர்பார்த்துள்ளேன்- என்றார். (ச)

# பொதுத்தேர்தலுக்காக வலுவான திட்டங்கள்!

## ஐ.ம.சக்தி தெரிவிப்பு

கொழும்பு, செப்.25

பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக வலுவான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத்தேர்தலை வெற்றி கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் தேர்தலில் ஒற்றுமையாகப் பயணிக்கவுள்ளோம். ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாஸவே தொடர்ந்தும் செயற்படுவார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-சி)

# மக்கள் கற்பிக்கும் பாடம் கற்றுக்கொள்ளத் தயார்!

## நாமல் தெரிவிப்பு



கொழும்பு, செப்.25

எமக்குப் பாடம் கற்பிப்பது மக்களுக்கு அவசியமாயின் அந்தப் பாடத்தை சிறந்த முறையில் கற்றுக்கொண்டு மீண்டும் சவால்களை வெற்றி கொள்ளத் தயாராகுவேன். நாட்டுக்காகவும், நாட்டு மக்களின் நலனுக்காகவும் முன்னெடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசியல் சேறு பூசல்கள் மற்றும் அரசியல் வாக்குறுதிகள் ஏதும் இல்லாமல் ஜனாதிபதி வேட்பாளராக புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கும் வகையில் இளைஞர், யுவதிகளை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டேன் என்று நம்புகிறேன்.

எமக்குப் பாடம் கற்பிப்பது அவசியமாயின் அந்தப் பாடத்தை சிறந்த முறையில் கற்றுக்கொண்டு மீண்டும் சவால்களை வெற்றி கொள்ளத் தயாராகுவேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)



# அநுரவுக்கு ஆதரவு


## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, செப்.25

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தான் அங்கம் வகிக்கும் கட்சி இது தொடர்பில் எத்தகைய முடிவை எடுத்தாலும் எனது முழுமையான ஆதரவு அநுரகுமாரவுக்கு இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# கென்யா, உகண்டா தலைவர்கள் வாழ்த்து



கொழும்பு, செப்.25

கென்யாவின் ஜனாதிபதி வில்லியம் ரூட்டோ, இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான நீடித்த இராஜதந்திர உறவுகளை வலியுறுத்தினார்.

வர்த்தகம், முதலீடு, காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான மலிவு நிதிக்கான அணுகல் போன்ற துறைகளில் கூட்டு முயற்சிகளின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரூட்டோ அடிக்கோட்டுக் காட்டினார்.

அதேவேளை புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உகண்டா ஜனாதிபதி முசெவேனி வாழ்த்துத் தெரிவித்தார்.

திஸாநாயக்கவின் தலைமைத்துவத்தை பாராட்டியதுடன், நாட்டை முன்னோக்கி வழிநடத்துவதற்கு இலங்கை மக்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையை அங்கீகரித்தார்.

வர்த்தகம், முதலீடு மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற துறைகளில் ஒத்துழைப்புக்கான புதிய வழிகளை ஆராய்வதற்கும் உகண்டாவின் உறுதிப்பாட்டை அவர் உறுதிப்படுத்தினார். (ச)

# தேர்தலுக்குப் பின்னர் முறைப்பாடு இல்லை



கொழும்பு, செப்.25

தேர்தலுக்குப் பின்னரான காலப்பகுதியில் இதுவரை எந்தவித முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. வரலாற்றில் இடம்பெற்ற தேர்தல்களில் இந்த முறை ஜனாதிபதித் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது என சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். தேர்தலுக்குப் பின்னரான இந்தக் காலப்பகுதியில் தொடர்ந்தும் அமைதியாகச் செயற்படுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். அமைதியான தேர்தலை நடத்துவதற்கு, குறிப்பாக ஜனநாயகத்தின் மீது ஆழ்ந்த அர்ப்பணிப்புக் கொண்டு ஒத்துழைப்பு நல்கிய பிரஜைகளுக்கு எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு சமஷ்டித் தீர்வை வழங்குவதே உண்மை மாற்றம்

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.25**

**தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, அவர்களைத் தனித்தேசமாக அங்கீகரித்து, சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வழங்காமல் தென்னிலங்கை மக்கள் கோருகின்ற மாற்றம் முழுமையடையாது என்ற உண்மையை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க புரிந்துகொள்ளவேண்டும் -இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஊடகங்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

70 வருடங்களுக்கும் மேலாகத் தொடரும் பல்வேறு சவால்கள், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் தமிழ் மக்கள் இத்தகைய உறுதியான நிலைப்பாட்டை வெளிக்காட்டிவருவதைப் பாராட்டுவதுடன், அதற்குத் தலைவணங்குகின்றோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது எப்போதும் போல வெறுங்கனவாகத்தான் இருக்கும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தும் இருக்கமுடியாது.

எனவே இவற்றிலிருந்து வேறுபட்டு உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தவேண்டுமாயின், தெற்கில் வாழும் மக்களுக்கு அநுரகுமார திஸாநாயக்க உண்மையைக் கூறவேண்டும்.

மாறாக தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்காமல், முன்நோக்கிப் பயணிக்கமுடியும் என அவர் கருதினால் அது ஒருபோதும் சாத்தியமாகாது என்பதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விளங்கிக்கொள்ளவேண்டும்.

அவர் முழுமையான சமஷ்டித் தீர்வை நோக்கிய பாதையில் இறங்கவேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுமாயின், நாம் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார். (ச)

### புலமைப்பரிசில் பரீட்சை

# மீண்டும் நடத்துவதா? இறுதி முடிவு விரைவில்

கொழும்பு, செப்.25

மீண்டும் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை நடத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர தெரிவித்துள்ளார். புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவு விவகாரம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக மேலதிக விசாரணைகள் நடத்தப்படும். குறித்த விசாரணைகளின் உண்மைகளை கருத்திற்கொண்டு மீண்டும் புலமைப்பரிசில் பரீட்சை நடத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும். எனினும் விசாரணைகளின் பின் நியாயமான தீர்வு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச)

# 35 வேட்பாளர்கள் கட்டுப்பணமிழப்பு

கொழும்பு, செப்.25


ஜனாதிபதி வேட்பாளர்களில் 35 பேர் கட்டுப்பணத்தை இழந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 12.5 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறத் தவறியதன் காரணமாக, 35 பேரின் கட்டுப்பணம் அரசால் கையகப்படுத்தப்படும் எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கே கட்டுப்பணம் கிடைக்குமென அவர் தெரிவித்துள்ளார். (ச)

# அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணப் பொதுக் கூட்டமும், நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் அனைத்துக் கலைப்பீட மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடப் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் குழு கேட்டுள்ளது. (ச-66)



# ரின் மீன் தொழிற்சாலைக்கு சீல்

கொழும்பு, செப்.25

தரச் சான்றிதழின்றி குருநாகல் பகுதியில் இயங்கி வந்த ரின் மீன் தொழிற்சாலை ஒன்று நுகர்வோர் அதிகாரசபையால் முத்திரையிடப்பட்டு பூட்டப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த தொழிற்சாலையின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இதுதவிர குறித்த தொழிற்சாலையிலிருந்து சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ள ரின் மீன்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச)

# பெண் வேட்பாளர்கள் களம்; அவதானம் செலுத்துங்கள்

## கண்காணிப்புக்குழு கோரிக்கை

கொழும்பு, செப்.25

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பெண் வேட்பாளர் ஒருவர் கூட களமிறக்கப்படவில்லை என்று ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்புக் குழு கரிசனை வெளியிட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித்தேர்தலில் 39 வேட்பாளர்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்ததுடன், அவர்களில் ஒருவர் உயிரிழந்ததன் காரணமாக 38 பேர் தேர்தலில் போட்டியிட்டனர்.

ஆனால் அவர்களில் பெண் வேட்பாளர் ஒருவர் கூட இல்லை. இது மிகுந்த கரிசனைக்குரிய விடயம். இது தொடர்பில் எதிர்வருங்காலங்களில் இலங்கை அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தவேண்டியது அவசியமாகும் என்று கண்காணிப்புக் குழுவின் தலைவர் நச்சோ சன்செஸ் ஆமர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



# புதினம் தெரியுமோ?

**சீட்டுக்கட்டுச் சரியிற மாதிரி எல்லாக் கவர்னர்மாரும் படபடவெண்டு ரிசைன் லெட்டரை அனுப்பிட்டினம். அதில ஒரு கவர்னருக்கு, அதுவும் தமிழ் பேசக்கூடிய கவர்னருக்கு வெளிநாடு போகத் தடை போடப்பட்டு இருக்கெண்டும் ஒரு தகவல் முந்தநாள் பரவினது. எல்லாரும் அந்தத் தமிழ்க் கவர்னர் கடைசியா வடக்கில இருந்தவா தான் எண்டு நினைச்சவை. ஆனால் அப்பிடி கறுப்புப்பட்டியலில இருக்கிறவர் வேற ஒருத்தராம். அவர் ஒரு அரசியல் கட்சியின்ர தலைவர் எண்டு உள்வீட்டுத்தகவல் சொல்லுது. இப்ப உங்களுக்கு அவர் ஆரெண்டு 'கிழக்கில' சூரியன் உதிக்கேக்க 'சேவல்' கூவினமாதிரி எல்லாம் வெளிச்சிருக்கும். எல்லா ஆளுநர்மாரும் தங்கடபாட்டில பதவி விலகிட்டதால இப்ப உடனடியா எல்லா மாகாணங்களுக்கும் புது ஆக்களைப் போடப்போகினம். வடக்குக்கும் 'வேதமான நாயகரை' போடப்போகினம். அநேகமா இண்டைக்கு காலைமை அவர் பதவியேற்கப் போறார் எண்டும் தகவல்.**

**இப்ப பெரும் தலையள் எல்லாம் உருளுறதைப் பாத்திட்டு சின்னத்தலையளுக்கும் உதறல் எடுக்கத் தொடங்கிட்டுதாம். முக்கியமா யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் நிரந்தரமான மாவட்டச்செயலர்களைப் போடப்போகினமாம். ஆறேழு மாதமா பதில் மாவட்டச்செயலர்மாரை வைச்சுத்தான் இந்த ரண்டு மாவட்ட நிர்வாகமும் ஒருமாதிரி நடந்தது. ஆனால் பார்லிமெண்ட் எலக்சனுக்கு முதல் இப்பிடி பதில் மாவட்டச் செயலர்மாரை தூக்கிப்போட்டு, நிரந்தரமான ஆக்களை போடவேணுமெண்டு மேலிடம் விரும்புதாம். இந்த நியூஸைக் கேட்டதும் இப்ப பதில் மாவட்டச்செயலர்மாரா இருக்கிறவைக்கு 'பக்கெண்டு' போட்டுதாம். இன்னும் கொஞ்சக்காலம் இப்பிடியே இருந்திடலாம் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தவையின்ர கனவில கல்லைத்தூக்கிப் போட்டா நெஞ்சு கனக்கும் தானே. இப்ப யாழ்ப்பாணத்துக்கு 'கனகமான' அதிகாரிதான் நிரந்தர மாவட்டச்செயலரா வரப்போறதாவும் ஒரு கதை அடிபடுகுது.**

**புது ஆளுநர் வந்தவுடன வடக்கு நிர்வாகத்தில கடும் மாற்றங்கள் வரப்போகுது. இவ்வளவுகாலமும் அரசியல் பின்புலங்களால ஒரே இடத்தில குந்தியிருந்தவையை உடனடியா வேற இடங்களுக்கு தூக்கியடிக்கிறதுக்கு எல்லா ஸ்கெட்ச்சும் போட்டிருக்காம். அதை நடைமுறைப்படுத்தேக்க, பெரும் அல்லோலகல்லோலம் வரவும் கூடும். அதைவிட சில நிர்வாக அதிகாரியள்மார், ஜே.வி.பி. ஒப்பீஸ்களுக்கு ஓடித்திரியினம் எண்டும் கதை. ஆனால் முந்தினமாதிரி வாளிவைச்சு ஒண்டையும் சாதிக்க ஏலாது எண்டது அவைக்கு தெரியாது போல.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் சுகாதாரமற்று இயங்கிய
# உணவகங்களுக்கு ரூ. 1,40,000 தண்டம்

யாழ்ப்பாணம், செப் 25

யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவு கையாளும் நிலையம் ஒன்றுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளதுடன், 15 உணவு கையாளும் நிலைய உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து 40ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் உணவு கையாளும் நிலையங்களில் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் பரிசோதனை நடவடிக்கைகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

அதன் போது, உரிய முறையில் குளிர்சாதன பெட்டியை பேணத் தவறியமை, தனிநபர் சுகாதாரம் பேணாமை, மருத்துவச் சான்றிதழ் கொண்டிராமை, சுகாதார முறைப்படி உணவு கையாளும் இடப்பரப்பினை பேணத் தவறியமை, உபகரணங்களை உரிய முறையில் பேணத் தவறியமை போன்ற செயற்பாடுகளுக்கு எதிராக உரிமையாளர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.

குறித்த வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது 15 உரிமையாளர்கள் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து, அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று, உரிமையாளர்களுக்கு ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபா தண்டம் விதித்தது.

அதேவேளை ஒரு உரிமையாளரின் உணவகத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரையில் உணவகத்துக்கு சீல் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. (ச-22,20)

## குடைச்சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், செப்.25

ஈழத்துச்சித்தர் குடைச்சுவாமிகளின் மாதாந்தக் குருபூசை நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள குடைச்சுவாமிகளின் சமாதி ஆலயத்தில் நடைபெற்றது.

காலை 8.30 மணியளவில் திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகித் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் குரு பூசை நிகழ்வுகளும், அதனைத் தொடர்ந்து அடியவர்களுக்குச் சிறப்பு அன்னதானம் வழங்கலும் இடம்பெற்றது. (ச-66)



## சின்னம் சூட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.25

யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் ராஜ்ய லக்ஷ்மி சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் கல்லூரியின் மண்டபத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் தாவரவியல் விஞ்ஞானபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.நாமகள் கிருஷ்ணபிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். (ச-45-66)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் திடீர் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் காரியங்கள் அனுகூலமாகும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்..

**இடபம்:** குடும்பம் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பொறுமை மிக அவசியம். குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரணையாக நடந்துகொள்ளவும். சிறு சிறு மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்லவும்.

**மிதுனம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். கையிருப்பு கரையும். பணிச்சுமை அதிகரித்தாலும் சோர்ந்து விடாமல் செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் குடும்பத்தில் ஏற்படக்கூடும். காரியம் சாதகமாக முடியும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. உதவி கிடைப்பதில் சற்று தாமதம் ஏற்படும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். வியாபாரம் வழக்கம்போல் நடைபெறும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** உற்சாகமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளின் வருகை செலவுகளை ஏற்படுத்தினாலும் மகிழ்ச்சியே ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிடமுடியும். முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். புதிய முயற்சிகள் தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். விட்டுக்கொடுத்துச் செல்லவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கக்கூடும். ஆஞ்சநேயரை வழிபடுவது நன்று. சங்கடங்கள் குறையும்.

**மகரம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். குழப்பங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையாக இருக்கவும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் கூடும்.

**கும்பம்:** எந்தச் செயலிலும் உற்சாகமாகச் செயற்பட முடியாதபடிக்கு சோர்வான மனநிலை ஏற்படக்கூடும். வழிபாட்டின் மூலம் தெளிவு பெற முயற்சிக்கவும். உறவினர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கக்கூடும்.

**மீனம்:** பணவரவு உண்டு. பொறுமையுடன் சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். வீண் விவாதம் செய்யாமல் இருப்பதன் மூலம் மன அமைதி கிடைக்கும். செலவு செய்ய நேரிடும். பிணக்குகள் நீங்கும்.

## குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவஸ்ரீ. பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், ஈழத்துச் சித்தர்கள் குருபூஜை விழாவும் தொடர் 5 குடையிற் சுவாமிகள் குருபூஜை நிகழ்வு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவஸ்ரீ. பால. குணானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆன்மீகவிருந்தினராக கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சமூகமாமணி கலாநிதி பா. தனபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து சைவப்புலவர் பிரசங்க பூஷணம் க. கைலநாதனால் 'வணங்க வேண்டிய குடையிற் சுவாமிகள்' எனும் விடயப்பொருளில் சொற்பொழிவும், சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ரி)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.25

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் விஷேட சிறப்புச் சொற்பொழிவும், பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக சிவஸ்ரீ பால. குணானந்தக்குருக்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும், 'அழுதால் உன்னைப் பெறலாமே' எனும் விடயப்பொருளில் பிரசங்கச்சுடர் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனின் சொற்பொழிவும் , சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ச-45)

## பரிசில் நாள் நிகழ்வு

கொடிகாமம், செப்.25

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை கல்லூரி முதல்வர் செ.பேரின்பநாதன் தலைமையில் சாவகச்சேரி பூமாரி மண்டபத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக பழைய மாணவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியுமான த.பிரதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-22,159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுரவின் தலைமைத்துவம் நீதியைப் பெற்றுத்தரவேண்டும்

*லசந்தவின் மகள் வேண்டுகோள்*

கொழும்பு, செப்.25

லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலைக்கு புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நீதிவழங்கவேண்டும் என லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அஹிம்சா விக்கிரமதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதிகாரத்தின் முன்னால் உண்மையை பேசியமைக்காக 15 வருடங்களுக்கு முன்னர் நியாயமற்ற விதத்தில் பறிக்கப்பட்ட எங்களின் தந்தையின் உயிருக்கு நீதியை பெற்றுக்கொடுக்கவேண்டும். உண்மை, பொறுப்புக்கூறலை நிலைநாட்ட வேண்டும். இலங்கையின் சமீபத்தைய மனித உரிமை வரலாற்றில் இடம்பெற்ற அநீதிகளுக்கும் தீர்வைக் காண்பதில் இந்த புதிய தலைமைத்துவம் புதிய நோக்கத்தை கொண்டுவர வேண்டும். நீதிக்கான பாதை கடினமானது என்ற போதிலும் எனது தந்தைக்கான எனது போராட்டத்தில் அவரது பாரம்பரியத்தை கௌரவிப்பதில் நான் உறுதியாகயிருக்கின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

## தேர்தல் பணிகளின்போது ஒத்துழைத்தோருக்கு நன்றி

*யாழ்.மாவட்ட பதில் செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.25

யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் சுமுகமாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் யாழ்.மாவட்டப் பதில் செயலரும், தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் நன்றி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக யாழ்.மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு விடுத்த அறிக்கையில், யாழ்.மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலானது நீதியாகவும், சுமுகமாகவும் நடைபெற்றுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு நல்கிய வாக்காளிப்பு, வாக்கெண்ணல், மேற்பார்வை, குழுக்கடமைகளில் ஈடுபட்ட அனைத்துத் தர உத்தியோகத்தர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் - என்றுள்ளது. (ச-66)

# தமிழ்த் தேசிய ஐக்கியத்தை தொடர்ந்து பலப்படுத்துவோம்

## பொதுவேட்பாளரை களமிறக்கிய தமிழ்ப்பொதுச்சபை தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 25**

**தமிழ் மக்கள் பொதுச்சபையாகிய நாம், தேசத்தைக் கட்டி எழுப்பும் உன்னதமான ஒரு வழியில் முதலாவது படியை கடந்திருக்கின்றோம். தமிழ்ப் பொது வேட்பாளரால் ஒன்று திரட்டப்பட்ட கூட்டுணர்வும், நம்பிக்கையும், தமிழ்த் தேசிய ஐக்கியத்தையும் தொடர்ந்து பலப்படுத்துவோம், பாதுகாப்போம் - இவ்வாறு தமிழ்ப் பொதுச்சபை நேற்று முன்தினம் இரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.**

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது விடுதலைக்காகத் தொடர்ச்சியாகப் போராடிவரும், அரசற்ற மக்கள் கூட்டமாகிய ஈழத்தமிழர்கள் சிறிலங்கா அரசு ஒழுங்குபடுத்தும் ஒரு தேர்தலில், தமது ஆள்புல எல்லைக்குள் எப்படித் தம்முடைய கூட்டு விருப்பை வெளிப்படுத்தலாம் என்பதற்கு ஆசியாவின் ஆகப்பிந்திய உதாரணம்தான் தமிழ்ப் பொதுவேட்பாளர். அரசாங்கம் அறிவித்த ஒரு தேர்தல் களத்தை எப்படி ஓர் அரசற்ற மக்களாகிய தமிழ் மக்கள் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் தங்களுடைய அபிலாஷைகளை ஒருமித்த குரலில் சொல்வதற்கும் பயன்படுத்தலாம் என்று சிந்தித்துக் களம் இறக்கப்பட்டவர்தான் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன்.

தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவது என்ற கோஷத்தோடு களமிறக்கப்பட்ட தமிழ்ப் பொதுவேட்பாளர் கிழக்கிலிருந்து தெரிவு செய்யப்பட்டார். அவர் சட்ட ரீதியாகப் பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கை உணர்வுபூர்வமாக இணைக்கும் ஒரு குறியீடாக எழுச்சி பெற்றுள்ளார். வடக்கில் அவருக்கு கிடைத்த வாக்குகள்தாயக ஒருமைப்பாட்டை பலப்படுத்த விரும்புபவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவை. அதேசமயம் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் பொதுவேட்பாளர் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கின்றார். கடந்த 15 ஆண்டுகளிலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் ஏதோ ஓர் ஒருங்கிணைவு ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பலப்படுத்தும் ஒரு தேர்தல் களம் என்ற அடிப்படையில் பரப்புரை நடவடிக்கைகளில் ஒருவித தன்னதிகாரம் அனுமதிக்கப்பட்டது. தன்னியல்பான, தன்னெழுச்சியான செயற்பாடுகள் தடுக்கப்படவில்லை. அதனால் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இருந்தும் தாயகத்திலும் தமிழ் மக்கள் அவரவர் கொள்ளளவுக்கு ஏற்பவும்; அவரவர் சக்திக்கு ஏற்பவும்; விருப்பத்துக்கு ஏற்பவும்; அவரவர் அரசியல் புரிதல்களுக்கு ஏற்பவும் பரப்புரை நடவடிக்கைகளில் பங்களித்திருக்கிறார்கள். ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளருக்கு கிடைத்த ஆதரவு அந்தப் பணியில் நம்மை தொடர்ந்து முன்னோக்கிச் செலுத்தும் ஊக்க சக்தியாக அமையும் என்று நம்புகின்றோம். புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எமது வாழ்த்துகள். தமிழ் மக்களின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தால்தான் இலங்கைத் தீவின் பல்லினச் சூழலைப் பாதுகாக்கலாம் என்பதனை புதிய ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் - என்றுள்ளது. (அ-ஓ.இ)



## நாமலை ஜனாதிபதியாக்க தொடர்ந்து பாடுபடுவோம்

### திஸ்ஸ குட்டியாராச்சி சூளுரை

கொழும்பு, செப்.25

நாமல் ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்குரிய நடவடிக்கையில் நாம் தொடர்ந்து ஈடுபடுவோம். எதிர்காலத்தில் அந்த இலக்கை அடைவோம் என்று சூளுரைத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி. பசில் ராஜபக்ச பயந்து வெளிநாடு ஓடவில்லை. அவர் நிச்சயம் நாட்டுக்கு வந்து பொதுத்தேர்தலை வழிநடத்துவார் .

அநுரகுமார திஸாநாயக்கவால் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விடயங்கள் முன்னெடுக்கப்படுமானால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் திஸ்ஸ குட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார். (ச-44)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப்.25

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் மென்பொருள் பொறியியல்மாணி கற்கைநெறிக்கான விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் ஒரு துறையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்வேண்டும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படுகின்ற அடிப்படை சான்றிதழ் கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது கேம்பிரிஜ் அல்லது எடெசெல் இல் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏதாவது தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். என்பதுடன் தெரிவுப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களை யாழ். பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும், 021222 3374 எனும் தொலைபேசிஇலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கமுடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ரி)

# இனவாதமற்ற இலங்கை அநுரவின் ஆட்சியில் மலரவேண்டும்

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கிளிநொச்சி, செப். 25

இனவாதமற்ற இலங்கைத் தீவை உருவாக்கும் அரசியல் சூருணர்வு மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், ஈழத்தமிழர்களின் அடிப்படை உரித்துகளை உறுதிசெய்யும் வகையில் தங்களின் ஆட்சி மலரும் என்ற எதிர்பார்ப்போடு, தங்களின் வெற்றிக்கான வாழ்த்துகளை பகிர்ந்து கொள்கிறேன் -இவ்வாறு இலங்கைத்தீவின் 9ஆவது ஜனாதிபதியாகப் பதவியேற்ற அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்;

இந்தநாட்டின் அரச இயந்திரத்தின் கொள்கை வகுப்பிலும், செயற்றிறனிலும் மாற்றத்தை எதிர்பார்த்து தங்களுக்கு ஆணை வழங்கிய தென்னிலங்கை மக்களைப் போலவே, கடந்த எழுபது ஆண்டுகால ஒடுக்குமுறைத் தளைகளிலிருந்து விடுபட்ட இறைமையுள்ள இனமாக வாழ்வதற்கான ஏதுநிலைகள் தங்களின் ஆட்சிக்காலத்திலேனும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஈழத்தமிழர்களிடையே நிறைந்திருக்கிறது. விசேடமாக, இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட ஓர் இனத்தின் வலியுணர்ந்த சக பிரஜையாகவும், எமது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக்கூடிய அரசதலைவராகவும் செயலாற்றும் வகையில் தங்கள்



தலைமையிலான ஆட்சிப்பீடம் கட்டமைக்கப்படுமாயின், அதுவே இந்த நாட்டின் சுபீட்சத்துக்கான அடித்தளமாக அமையும். இனவாதமற்ற இலங்கைத்தீவை உருவாக்கும் அரசியல் சூருணர்வு மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், ஈழத்தமிழர்களின் அடிப்படை உரித்துகளை உறுதிசெய்யும் வகையில் தங்களின் ஆட்சி மலரும் என்ற எதிர்பார்ப்போடு, தங்களின் வெற்றிக்கான வாழ்த்துகளைப் பகிர்ந்துகொள்கிறேன் - என்றுள்ளது. (அ-ஓ.26.113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதியளவு எரிபொருள் இருப்புடன் ஒப்படைப்பு!

## காஞ்சன விஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, செப்.25



தடைப்படாத எரிபொருள் மற்றும் மின்சாரத்தை வழங்கக் கூடியவாறான போதிய நிலக்கரி, பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புடன் வலுவான நிதி நிலைமையைக் கொண்ட கட்டமைப்பை கையளித்துச் செல்கிறேன் என்று முன்னாள் மின் மற்றும் சக்தி வலு அமைச்சர் காஞ்சன விஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சுக்கான வாகனங்களையும் பொறுப்புகளையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தனது எக்ஸ் வலைத்தளத்தில் அவர் இதனைப் பதிவிட்டுள்ளார்.

வலுவான நிதியியல் கட்டமைப்பை கொண்டிருந்த மின் மற்றும் சக்தி அமைச்சு உள்ளிட்ட நிறுவனங்களை போதியளவு பெற்றோலிய உற்பத்தி மற்றும் மின்னுற்பத்திக்கு அவசியமான நிலக்கரி கையிருப்புகளுடன் கையளித்து விட்டேன்.


இவ்வனைத்து கட்டமைப்புகளும் சாதகமான ஐந்தொகை செலவினமீட்டுசேவை வழங்கல், விநியோகஸ்தர்களுக்கான உரிய கால நிதி செலுத்துகை மேலதிக வருமானத்தின் ஊடாக திறைசேரிக்கு ஆதரவளித்தல் உள்ளிட்ட நேர்மறையான விளைவுகளை வழங்கும் நிலையிலுள்ளன.

2022 ஆம் ஆண்டு 413 மணித்தியால மின் விநியோக துண்டிப்பு, எரிபொருள், நிலக்கரி பற்றாக்குறை, பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் விநியோகஸ்தர்கள் இன்மை, அவற்றுக்குத் தேவையான நிதி இன்மை, ஆகிய நிலைமைகளே காணப்பட்டன.

இருப்பினும் தற்போது தடைப்படாத எரிபொருள் மற்றும் மின்சாரத்தை வழங்கக் கூடியவாறான போதிய நிலக்கரி, பெற்றோலிய உற்பத்திகளின் கையிருப்புடன் வலுவான நிதி நிலைமையைக் கொண்ட கட்டமைப்புகளாக இவற்றை கையளித்துச் செல்கிறேன். இலங்கை பெற்றோலிய களஞ்சியப்படுத்தல் நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்குத் தேவையான 123, 888 மெற்றிக்தொன் டீசல், 13627 மெற்றிக் தொன் சுப்ப டீசல், 92 ரக ஒக்ரைன் பெற்றோல் 90,972 மெற்றிக் தொன், 18 ,729 மெற்றிக் தொன் 95 ரக ஒக்டென் பெற்றோல்,விமான பயன்பாட்டுக்கு தேவையான ஜெட் எ 1 எரிபொருள் 30,295 மெற்றிக்தொன் எரிபொருள்கள் ஆகியவை கடந்த 20 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கையிருப்பில் காணப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதிகாரங்களை பகிர்வதே சிறப்பு

## மஹிந்த தேசப்பிரிய சுட்டிக்காட்டு



கொழும்பு, செப்.25

**நாடாளுமன்றத் தேர்தலை விட மாகாண சபைத் தேர்தலை நடத்தி மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதே முக்கியத்துவமானது. எனவே, 13 அல்லது 13 பிளஸ் என்பதற்கு அப்பால் முதலில் இந்தத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.**

ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒக்ரோபர் 26ஆம் திகதி எல்பிட்டி பிரதேசசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்ததன் பின்னர் 52 - 66 நாள்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக அறிவிக்கும் வர்த்தமானியில் வேட்புமனுத்தாக்கலுக்கான தினத்தையும் தேர்தலுக்கான தினத்தையும் குறிப்பிட வேண்டியதில்லை. அதாவது இவ்வாரம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் டிசெம்பர் முதல் வாரத்துக்குள் நிச்சயம் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

தற்போது மாகாண சபைகளும் காணாமலாக்கப்பட்டிருக்கின்றன. அவை தொடர்பிலும் அவதானம் செலுத்தவேண்டும்.

ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்காக நாம் முன்னிற்போம். 13ஆவது திருத்தமா அல்லது 13 பிளஸா என்பது இரண்டாம் பட்சமாகும்.

ஆனால் மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்பதில் நாம் ஸ்திரமாகவுள்ளோம்- என்றார். (ச)

# கூட்டம் பிற்போடல்

யாழ்ப்பாணம், செப்.25

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த பொதுச்சபைக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது. அதன்படி எதிர்வரும் ஒக்ரோபர் 20ஆம் திகதி திங்கட்கிழமை இந்தக் கூட்டம் இடம்பெறும் என்று சங்கத்தின்செயலாளர் அறிவித்துள்ளார். (ச-45-9)

# தன் தலையில் மண்ணை போட்டுக்கொண்ட ரணில்!

அரசியல் சாணக்கியம், மேற்குலக நாடுகளுடன் நெருக்கமான உறவு, பொருளாதார நிபுணத்துவம் போன்ற ஆளுமையுள்ள ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்சக்களை காப்பாற்றி, தொடர்ந்தும் ஆட்சியில் செயற்படவைத்தமையே ரணிலுக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சமகால ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைந்துள்ளார். இதுவரை மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதியாக பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க மற்றுமொரு தடவை தோல்வி அடைந்துள்ளார். கடந்த கோத்தாபய அரசாங்கம் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட போதும், ஜனாதிபதிப் பதவி மூலம் அவர்களை பாதுகாத்தமையே அவரின் தோல்விக்கான பிரதான காரணமாகும். பல்வேறு குற்றச்சாட்டுகள், ஊழல்கள் அதிடன் தொடர்புடைய அரசியல்வாதிகளை தன்வசம் வைத்திருந்தமை ரணிலுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ச)

# சதொச தலைவர் பதவி விலகினார்

கொழும்பு, செப்.25

லங்கா சதொச நிறுவனத்தின் தலைவர் பசந்த யாப்பா அபேவர்த்தன தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இவர் தனது இராஜினாமா கடிதத்தை வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு அனுப்பி வைத்துள்ளார். புதிய ஜனாதிபதியான அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளதை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பசந்த யாப்பா அபேவர்த்தன தனது இராஜினாமா கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ச)



# அநுரவின் வெற்றிக்கு வவு.வில் பாற்சோறு

வவுனியா, செப்.25

நிறைவடைந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இலங்கையின் புதிய ஜனாதிபதியாக மக்களால் தெரிவுசெய்யப்பட்டதையடுத்து வவுனியாவில் கட்சி ஆதரவாளர்கள் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா இரட்டை பெரியகுளத்தில் கட்சி ஆதரவாளர்கள் பொதுமக்களுக்கு பாற்சோறு வழங்கி புதிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வெற்றியை கொண்டாடினர். (ச)

# மாலைதீவுடன் கைகோர்க்க அநுரகுமாரவுக்கு அழைப்பு

கொழும்பு, செப்.25

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க நட்பை மேலும் வலுப்படுத்த உங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நாம் நெருங்கிய அண்டை நாடுகளாக இருக்கின்றோம் -இவ்வாறு இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள அநுரகுமார திஸாநாயக்கவுக்கு மாலைதீவு ஜனாதிபதி முகமது முய்சு அழைப்பு விடுத்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட உங்கள் புதிய பாத்திரத்தில் நீங்கள் மகத்தான வெற்றிபெற வாழ்த்துகள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பதில் வழங்கியுள்ள அநுரகுமார, உங்கள் அன்பான விருப்பங்களுக்கும், எமது இரு நாடுகளும் ஏற்கனவே அனுபவித்து வரும் நெருங்கிய உறவுகள் நமது பரஸ்பர நலனுக்காகவும், பிராந்தியத்தின் நலனுக்காகவும் நட்புறவை மேலும் வளர்க்கவேண்டும் என்பதே எனது விருப்பம் எனத் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அநுரவுக்கு முன்னுள்ள சவால்கள்

மாற்றம் என்ற ஒற்றைச் சொல் மந்திரத்தால் மக்கள் ஆதரவைப் பெற்று ஜனாதிபதிப் பதவிக்கு வந்துள்ள அநுரகுமார திஸாநாயக்க 'எனது கையில் மந்திரக்கோல் எதுவும் இல்லை' என்று கூறியிருக்கின்றார். உடனடி மாற்றங்கள் சாத்தியமில்லை என்பதை அவர் இத்தகைய வார்த்தைகள் மூலம் மறைமுகமாக வெளிப்படுத்தியிருக்கின்றார். மாற்றத்துக்காக வாக்களித்து விட்டு, தடாலடி நடவடிக்கைகளை எதிர்பார்த்திருப்போருக்கு ஜனாதிபதி அநுரவின் கருத்து சற்று ஏமாற்றமாகவே இருக்கும். ஆனாலும் அதுவே யதார்த்த நிலைமை. 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் நாட்டு மக்களின் சிந்தனையில் சற்று மாற்றம் ஏற்பட்டிருக்கின்றது. நாட்டின் சீரழிவுக்கு ஊழலும், கடந்த கால ஆட்சியாளர்களும் காரணம் என்பதைப் புரிந்துகொண்ட மக்கள் அதற்கான தீர்வைத் தேடிய போது, இதுவரை பதவிக்கு வராத -அநுரகுமாரதிஸாநாயக்கவே, பெரும்பாலானோரின் தெரிவாக இருந்தார். அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஊழலுக்கு எதிராக மேற்கொண்ட பரப்புரைகள், தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட வாக்குறுதிகள் மக்களை அநுரவின் பக்கம் திருப்பியிருந்தன. தேர்தல் பரப்புரைக் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க, தங்களின் உறுதிமொழிகள் உடனடியாகவே நிறைவேற்றப்படும் என்ற தொனியிலேயே கூறியிருந்தார்.

இலங்கையின் நிலைமை தற்போது சீராக இருப்பது போன்று தென்பட்டாலும், உண்மை நிலைமை அவ்வாறு இல்லை. 2022 ஆம் ஆண்டு வெடித்த பொருளாதார நெருக்கடி தற்போது அமிழ்த்தி மறைக்கப்பட்டாலும் இன்னமும் நாடு கத்தியின் மீதே நடந்துகொண்டிருக்கின்றது. இப்படியான இக்கட்டான நிலைமையில் பதவியேற்றிருக்கும் அநுரகுமார திஸாநாயக்க பெரும் மாற்றங்களைச் செய்வதற்கான ஏதுநிலை மிகக்குறைவாகவே இருக்கின்றது. நாடாளுமன்றத்தில் அநுரகுமாரவுக்கு ஆதரவு மிகமிகக் குறைவு என்கின்ற நிலைமையில் அவர் நாடாளுமன்றத்தை கலைத்தலூடாக, தேர்தலை நோக்கி நகர்ந்திருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலுக்கு இடைப்பட்ட காலத்தில் எதிர்க்கட்சிகள் மீதோ, கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்கள் மீதோ அநுர கைவைத்தால், எதிர்வரும் தேர்தலில் அவர்கள் அதைச் சாதகமாக்கிக் கொள்ளக்கூடும் என்பதால் இப்போதைக்கு தடாலடி நடவடிக்கைகள் எதையும் அநுர மேற்கொள்ளும் சாத்தியமில்லை. நாடாளுமன்றத்தேர்தல் நடைபெற்றாலும் புதிய நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்ளுமா என்பதும் சந்தேகமே. அவ்வாறு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தேசிய மக்கள் சக்தி பெறாவிட்டால், அநுரகுமார திஸாநாயக்கவால் சிறு மாற்றத்தைக்கூட ஏற்படுத்தமுடியாது என்பது நிதர்சனம். இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு அநுரகுமார தரப்பு ஈஸ்டர் தாக்குதல் விசாரணை போன்ற விடயங்களைக் கையிலெடுத்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப முயலலாம். அவற்றின் ஊடாக மக்கள் ஆதரவைத் தங்கள் பக்கம் கொண்டு வருவதற்கான எத்தனங்களும் மேற்கொள்ளப்படலாம். 100 நாள் திட்டத்துடன் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கமும் அதையே செய்தது. ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தால் ஆக்கபூர்வமான எதையும் சாதிக்க முடியவில்லை. அநுர தரப்பும் அதையே செய்ய முயன்றால் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளும் சந்தர்ப்பம் இப்போது கிடைக்கலாம். ஆனால் பத்தோடு பதினொன்றாகவே அநுரகுமாரதிஸாநாயக்கவும் மக்களால் கணிக்கப்பட்டு, பின்னொரு நாளில் கோத்தாபயவை விடவும் பரிதாபமாக பதவியில் இருந்து வெளியேற நேரிடும்.

இவையனைத்தையும் மீறி அநுரகுமார திஸாநாயக்க மாற்றத்தை ஏற்படுத்த விரும்பினால், அவர் தனது அரசியல் ஆதாயங்களை புறந்தள்ளிச் சிந்திக்கவேண்டும். ஆனால் கடும் போராட்டங்களின் பின்னர் அதிகாரத்துக்கு [illegible] வந்திருக்கும் அநுரகுமார அவ்வாறு சிந்திப்பதற்கான சாத்தியங்களும் [illegible] குறைவே. இந்த இடியப்பச் சிக்கல்களுக்குள் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்கள் [illegible] நாட்டில் ஏற்படுமா? என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. ஆனால் இவை அனைத்தையும் வெற்றிகரமாகக் கையாண்டு நாட்டில் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை அநுரகுமார திஸாநாயக்க ஏற்படுத்துவாரானால் இலங்கை வரலாற்றில் அழிக்க முடியாத - அசைக்கமுடியாத - இடத்தை அவர் பெறுவார் என்பது திண்ணம்.




# ஐ.தே.க.வின் அழைப்பு ஐ.ம.ச. இரு நிலைப்பாடு

**கொழும்பு, செப். 25**

**பொதுத்தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அழைப்புத் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்திக்குள் இருவேறு நிலைப்பாடுகள் நிலவுகின்றன.**

ஒரு தரப்பு இதற்கு பச்சைக்கொடி காட்டி, சஜித் தலைமையிலேயே கூட்டணி அமைய வேண்டும் எனக் கூறினாலும் மற்றைய தரப்பு போர்க்கொடி தூக்கியுள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியை சிதைப்பதற்குரிய ரணிலின் வியூகமே இதுவெனவும், அதில் சிக்கக்கூடாது என அந்தத் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது. எனினும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு வேண்டுமானால் ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்து செயற்படலாம், இதில் எவ்வித தடையும் இருக்காது என மற்றைய தரப்பு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் கூட்டணியில் உள்ள தமிழ் பேசும் கட்சிகளும், சஜித், ரணில் தரப்பு இணைப்பு அவசியமென வலியுறுத்தி வருகின்றன. (ச-44)

# பரந்துபட்ட கூட்டணி ஐ.ம.சக்தி அழைப்பு

கொழும்பு, செப். 25

நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியினுடைய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளக்கூடிய பரந்துபட்ட கூட்டணியை அமைக்க சகலரும் இணைந்துகொள்ளலாம் என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பில் இந்தவிடயம் கலந்துரையாடப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான நிகழ்ச்சித்திட்ட நிரல் சஜித் பிரேமதாஸ தலைமையில் தயாரிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-சி)

# பதவி விலகும் ஆளுநர்கள்


கொழும்பு, செப்.25

இலங்கை நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டதை அடுத்து பல அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் பதவி விலகி வருகின்றனர். அதற்கமைய, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க, வடமேல் மாகாண ஆளுநர் செய்னுலாப்தீன் ஆலிம் நஸீர் அஹமட், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ரொஷான் குணதிலக்க, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோர் தமது ஆளுநர் பதவியை இராஜினாமா செய்துள்ளனர். அதேவேளை பல அமைச்சர்கள் தங்கள் பதவிகளிலிருந்து விலகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ச)

# முட்டை விலை குறைவடைந்தது

கொழும்பு, செப்.25

முட்டையொன்றின் விலையில் திடீர் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. முட்டை ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. உற்பத்தி அதிகரிப்பு மற்றும் தேவை குறைவடைந்தமையே காரணம் என்றும் ஒரு முட்டையின் விலை 28 ரூபா தொடக்கம் 30 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் எனவும் சங்கத்தின் செயலாளர் அனுரசிறி மாரசிங்க தெரிவித்துள்ளார். (ச)



## நாளை

26.09.2024

வியாழக்கிழமை - புரட்டாதி - 10

சுபநேரம் : 07.32 - 09.02

ராகுகாலம் : 01.32 - 03.02

## நாளொரு நல்வார்த்தை

நேற்று செய்த தவறை ஒப்புக்கொண்டால் இன்று நீ அறிவாளி ஆவாய்.

- கதே -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30 சடலங்கள் மீட்பு

செனெகலின் கடற்கரைப் பகுதியில் படகொன்றிலிருந்து சிதைந்த நிலையில், 30 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு.அன்ஸ்லி மயூரஸ் அவர்களின் அன்புத் தந்தை

**அன்ரனி வில்பிரட் ஜேசுதாஸ்**

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா நித்திய இளைப்பாற்றை அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்.**

(CR 43284) A-1

### நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தின் கீழ் பகுதியில் அமைந்துள்ள 34'X29' கொண்ட கடைக் கட்டடம் வியாபார நோக்கற்ற ஏனைய செயற்பாடுகளுக்கு வாடகைக்கு வழங்கப்படும். தேவைப்படுவோர் தங்களால் செலுத்தக்கூடிய முற்பணம், வாடகை என்பவற்றை குறிப்பிட்டு சங்கக் காரியாலயத்தில் 10.10.2024 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
தொடர்பிற்கு - 021 2222 143

(CR 43283) A-1

# புதிய அரசாங்கத்துடன் பணியாற்றத் தயார்

## ஐ.எம்.எப். அறிவிப்பு

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து பணியாற்றுவதற்குத் தயாராகவுள்ளதாக சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டம் குறித்த மறு ஆய்வுக்கான திகதி குறித்து பேச்சு மேற்கொள்ளப்படவுள்ளது.

2022 இல் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் சிக்குண்ட பின்னர் இலங்கையை மீட்சிப் பாதையை நோக்கிக் கொண்டு செல்வதில் மிகவும் கடுமையான போராட்டத்தின் மூலம் கிடைத்த பலாபலன்களை தொடர்ந்தும் முன்னெடுப்ப தற்காக இலங்கை ஜனாதிபதியுடனும் அவரது குழுவினருடனும் இணைந்து பணியாற்றுவதற்கு ஆர்வமாக உள்ளோம் என்று சர்வதேச நாணயநிதியத்தின் பேச் சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-சி)

# மாமனார் தாக்குதலில் மருமகன் படுகாயம்!

மாமன் - மருமகனுக்கு இடையில் மதுபோதையில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாகியதில் மருமகன் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கல்மடோ இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபரான மாமனாரை கைதுசெய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-113)

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. அன்ஸ்லி மயூரஸ் அவர்களின் அன்புத் தந்தை

**திரு. அன்ரனி வில்பிரட் ஜேசுதாஸ்**


அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம்.

அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் சங்கம்**
**புனித பத்திரிசியார் கல்லூரி**
**யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
21 . 10 . 1947



மறைவு
21 . 09 . 2024

### நடராசா சண்முகலிங்கம் (லாந்து)

கோண்டாவில் மேற்கு, கலட்டி லேனை பிறப்பிடமாகவும், முத்தட்டிமட லேன் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சண்முகலிங்கம் அவர்கள் கடந்த (21.09.2024) சனிக்கிழமை அதிகாலை 2.15 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான நடராசா - சிந்தாமணி தம்பதியரின் பாசமிகு புதல்வனும், பொன்னுத்துரை - அருளம்மா தம்பதியரின் மருமகனும், யோகராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சீதாலட்சுமி (நேசம்மா), காலஞ்சென்ற சங்கரலிங்கம் (சற்குணம்) மகேஸ்வரி, பஞ்சலிங்கம் (சிவராசா) இரத்தினலிங்கம் (மணியம் - ஜேர்மனி) தனலட்சுமி (வசந்தி- கனடா) ஆகியோரின் சகோதரரும், மனோன்மணி, காலஞ்சென்ற தங்கநாயகம், கமலாம்பிகை , மகாதேவன், ஞானேஸ்வரி, கேசவதேவி, குகதாஸன், புஸ்பராணி (கனடா), பரமேஸ்வரன், செல்வராணி (கனடா) காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன், இந்திராணி (கனடா), விஜயராணி (கனடா), புஷ்பநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், குமுதினி (நோர்வே), சுதாகரன் (U.K) பிரபாகரன் (ஜேர்மனி), கோமனா (சுவிஸ்), சுபாஸ்கரன் (சுதன்-கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறீநந்தகுமார் (நோர்வே), புஷ்பலதா (UK) நித்தியா, கிருபாகரன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், சௌமியா, சஜித் பிரவின்.பிரநீதன், கபினாஷ், கீர்த்திகா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற குணசேகரம் , ஜோர்ஸ் (கனடா ), யோகரட்ணம் (கனடா), தாசன் (கனடா) ஆகியோரின் சகலனும், இரஜேஸ்வதி, இரஞ்சிதமலர், அன்னலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2024) புதன்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார் உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்தட்டிமட லேன்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 398 5521**

(CS/56278) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 06 . 1961



மறைவு
24 . 09 . 2024

### முருகேசு சேரழகன்

**(ஓய்வுநிலை பெற்ற ஆங்கில ஆசிரியர், வயாவிழான் மத்திய மகா வித்தியாலயம், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)**

சங்கத்தானை சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் ஐயனார் கோவில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு சேரழகன் அவர்கள் நேற்று (24.09.2024) செவ்வாய்க்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு மற்றும் ராசமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருந்தவநாதன் மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், யசோதாவின் அன்புக் கணவரும், மதுசன், ஜானுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பூவழகி, பூங்குழலி, வேங்குழலன், யாழினி, செங்கையாழியன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மகிந்தன் மற்றும் சகிந்தன், வினோதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் 105, ஐயனார் கோவில் வீதி, தட்டாதெரு, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக [illegible] கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை [illegible] உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**105, ஐயனார் கோயில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**076 549 6846**
**076 410 7966**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை
25.09.2024
புதன்கிழமை

இன்றைய யோசனைகளே நாளைய வரலாற்றை உருவாக்குகின்றன.
- ஜோன் மேனார்ட் கீன்ஸ்



சயனிகா சிறீகாந்த்
ஊடகக்கற்கைகள் துறை
கலைப்பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

# தவிர்க்கமுடியாத சக்தியாக மாறியிருக்கும் அநுர!

## ஜனநாயக ரீதியான மாற்றம் ஏற்கப்பட வேண்டியதொன்றே

எவர் ஏற்றாலும் மறுத்தாலும், நாட்டின் புதிய அரசியல் சக்தியாக அநுரகுமார திஸாநாயக்க உருவெடுத்திருக்கின்றார் என்பது அழுத்தம் திருத்தமான உண்மையே. இதில் விவாதத்துக்கு இடமில்லை. தேசிய அரசியலில் தவிர்க்க முடியாத ஒரு சக்தியாக 'தேசிய மக்கள் சக்தி' வளர்ந்திருக்கின்றது. இந்த சக்தியை விடுத்து எதிர்காலத்தில் இலங்கையின் அரசியலை எவருமே பேசிவிட முடியாது. 1971ஆம் ஆண்டு மற்றும் 1988, 1989ஆம் ஆண்டுகளில் இரண்டு தடவைகள் ஆயுதக் கிளர்ச்சிகள் மூலம் ஆட்சியை கவிழ்த்து, புதியதொரு புரட்சிகர ஆட்சியை ஏற்படுத்த முனைந்து படுதோல்வி கண்ட 'மக்கள் விடுதலை முன்னணியின்' புதிய வடிவமே இந்த புதிய சக்தி. ஜனநாயக நீரோட்டத்தினுள் வந்த அவர்கள், பல ஏற்றத் தாழ்வுகளை இதுவரை இலங்கை அரசியலில் கண்டு வந்தனர்.

ஆனால், 2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளால் ஏற்பட்ட அமைதியான மக்கள் புரட்சி என்பது, இவர்களுக்கு பாரியதொரு எதிர்காலத்தை அமைத்துக் கொடுத்தது எனலாம். வரலாற்றில் முதல் தடவையாக இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகள் மறக்கப்பட்டு மக்கள் ஒன்றாக கிளர்ச்சியில் ஈடுபட்டனர். குறிப்பாக, இளைஞர்களும் யுவதிகளும் இந்தக் கிளர்ச்சியில் காட்டிய ஆர்வத்தினை சரியான முதலீடாகப் பயன்படுத்தியது இந்த புதிய சக்தி. கடந்தகால தேர்தல்களில் 3 தொடக்கம் 4 வீதமான வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்த ஒரு கட்சி, இரண்டு ஆண்டுகளில் இவ்வாறு அசுர வளர்ச்சி பெற அடிகோலிய காரணிகளில் இந்த மக்கள் கிளர்ச்சியானது, விசேட பங்காற்றியதை யாரும் மறுக்க முடியாது.

இனவாதத்தாலும் ஊழலாலும் மிகவும் பயங்கரமாக பாதிக்கப்பட்டிருந்த சிறுபான்மைச் சமூகங்களின் இளம் வயதினர் தேசிய மக்கள் சக்தியால் மிகவும் கவரப்பட்டுள்ளனர். கடந்தகால ஊழல் நிறைந்த ஆட்சிகள், இலஞ்சம், அதிகார துஷ்பிரயோகம், வீண்விரயம், கால தாமதம், விலைவாசி கூடியமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை, வறுமை, வேலையின்மை, அதிகரித்த வருமான இடைவெளி, தொடர் ஏமாற்றம், விரக்தி, சமூக வலைத்தளங்களின் பாவனை ... என்று பல பின்னணிக் காரணிகள் இந்த மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன. தேசிய மக்கள் சக்தியை இந்தளவுக்கு வளர்த்து விட்ட பெருமையில் பெரும் பங்கு, 2005 தொடக்கம் 2022 வரை ஆட்சியில் இருந்தவர்களுக்கு உண்டு எனலாம். காரணம் ஊழல் உச்சம் தொட்ட காலமாக இந்தக் காலப்பகுதிதான் இருந்தது. மாற்றம் ஏற்படும் என மக்கள் எண்ணினார்கள். அது ஏற்படாவிட்டால் கூட, மக்கள் கவலைப்படும் நிலையில் இல்லை. காரணம் இழப்பதற்கு இனி என்னதான் இருக்கிறது என்பதே அவர்களின் நிலைப்பாடு. ஆனால், இத்தனை போராட்டங்கள், இழப்புகள், வலிகள் என அத்தனையையும் அனுபவித்த பின்னர் அதிகாரம் கைகளுக்கு கிடைத்தால், அதனை இலகுவில் அவர்கள் கைவிடமாட்டார்கள் என அவர்களின் ஆதரவாளர்கள் ஆழமாக நம்புகின்றனர்.

### அவ்வளவு இலகுவில் இனி தளராது தேசிய மக்கள் சக்தி

தேசிய மக்கள் சக்தியினர் நாட்டையும் மக்களையும் திருப்திப்படுத்த எதையும் செய்வார்கள். தோட்டாக்களினால் அடைய முடியாததை வாக்குச் சீட்டுகளினால் அடையும் காலம் கனிந்து வந்துவிட்டது. முன்னர் இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும் பொழுது இந்தத் தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஓர் இயல்பை கொண்டே நடந்து முடிந்திருக்கின்றது.

தேர்தல்களில் இதுவரையில் 5 வீதத்துக்கும் குறைவான வாக்குகளை மட்டுமே பெற்றுவந்த ஒரு விளிம்பு நிலைக் கட்சி ஒரு முதன்மைப் போட்டியாளராக எழுச்சியடைந்து வெற்றி கண்டிருப்பது வரலாற்றில் பதிவு செய்யபடவேண்டிய ஒரு விடயம் ஆகும். 1990கள் தொடக்கம் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது சிங்களச் சமூகத்தின் கொடிய எதிரிகளாகக் கட்டமைக்கப்பட்டு வந்த தமிழ்ப் பிரிவினைவாதம், டயஸ்போரா சமூகம் மற்றும் 2019ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதம் போன்ற கோஷங்கள் பிரசார மேடைகளிலிருந்து தலைமறைவாகியிருப்பது.

அடுத்த விசேடம், கடந்த 20 ஆண்டுகளில் வெளிப்படையாக இனவாதம் பேசப்படாமல் நடந்து முடிந்த முதலாவது தேர்தல் இது. சிங்கள ... மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தெளிவாகவே ஒரு ஜே.வி.பி. அல்லது என்.பி.பி. ஆதரவு அலை நிலவி வருவதை அவதானிக்க முடிந்தது. ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக வெவ்வேறு தரப்புகளால் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகள் மீண்டும் மீண்டும் இதனை உறுதி செய்திருக்கின்றன. அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அணி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் அரசியல் ஆய்வாளர்களும் கூட 'ஆம் அவர்களுக்கு ஓர் ஆதரவு அலை இருந்து வருகிறது. அதை மறுக்க முடியாது' என்ற பீடிகையுடனேயே தமது கருத்துகளை முன்வைத்திருந்தனர்.

### விரக்தியின் உச்ச நிலையில் வெளிப்பட்ட மக்கள் தெரிவு

'அநுர குமாரவே எங்கள் தெரிவு' என்று சொல்லும் பலர் அதற்கு முன்வைத்த காரணம் 'ஒரு தடவை அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்துப் பார்ப்போமே' என்பதுதான். அதாவது, 'இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கிறோம். கடைசியில் இன்றைய வங்குரோத்து நிலைதான் எமக்கு எஞ்சியிருக்கின்றது' என்ற ஆதங்கமே இந்தப் பேச்சுகளில் தொனிக்கிறது. 'இந்தத் தடவை திசைகாட்டிக்கு' என்று மக்கள் சொல்வதையே ஜே.வி.பி. அணி தனது பிரசார சுலோகமாக பயன்படுத்தியது. இதுவே அதன் வெற்றிக்கும் ஆணிவேராக இருந்தது. 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் போது எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடுகள் போன்ற பிரச்சினைகள், இதுவரையில் மக்கள் எண்ணிக் கொண்டிருந்த பாரம்பரிய அரசியல் நிலையில் இருந்து அவர்களை வெளியில் எடுத்து வந்தன. இதனால், ராஜபக்சக்களை ஆதரித்த அதேயளவு தீவிரத்துடன் அவர்களை எதிர்க்கவும் தொடங்கினார்கள். சுருக்கமாகச் சொன்னால் 2019ஆம் ஆண்டில் கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கிய பல சிங்கள நடுத்தர ... சேர்ந்தவர்கள் பல இலட்சக்கணக்கில் இப்பொழுது திசைகாட்டியின் பக்கம் வந்திருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி சுதந்திரத்துக்கு பிற்பட்ட இலங்கை அரசியலில் ஏற்பட்ட ஒரு மிகப் பெரிய மாற்றமாக வரலாற்றில் பதிவு செய்யப்படும். இந்த மாற்றத்தால் இலங்கை அரசியலுக்கு இதுவரையில் இல்லாத ஒரு புதிய இயங்கலை எடுத்து வர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீர் எனும் தங்கத்திரவம்



■ ச.அபிசரண்
மூன்றாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

"தண்ணீர் இனி பொதுச் சொத்தல்ல. அது அரசுக்கோ, அரசு சுட்டுவிரல் காட்டும் ஓர் இலாப நோக்கமுடைய அமைப் புக்கோ, ஓர் தனியாள் முதலாளிக்கோ, அல்லது அரசுக்கு தரகுப்பணம் கொடுக்கும் ஓர் பல்தேசிய நிறுவனத்துக்கோ சொந்தமானது எனும் ஒரு மாபியா நடைமுறையை நோக்கி உலகமயமாத லின் விளைவு போய்க் கொண்டிருக்கிறது. சேவைத் தொழில்களான கல்வி, மருத்துவம் என்பன பணம் சம்பாதிக்கும் துறைகளாகி மக்களை அச்சுறுத்துவதைப் போலவே தண்ணீர் விற்பனையும் கோடிகளில் இலா பம் பார்க்கும் ஒரு வர்த்தக தொழில்துறையாக இன்று மேலெழுந்து வருகிறது.

பூமியின் ஆதாரமே தண்ணீர் தான்! தண்ணீர் என்ற அச்சாணியில்தான் இந்த உலகமே இயங்கிக் கொண்டிருக்கின்றது. உலகம் பசுமையாகவும் அழகாகவும் இருக்கும், பூத்தலும் காய்த்தலும் நிகழ்த்தவும், மனிதர் முதல், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் சீவிக்கவும் தண்ணீர் தான் மூலாதாரமாக இருக்கிறது. மனித உடல் அறுபது சதவீதம் நீரால் ஆனது. நாம் வாழும் பூமி எழுபது சதவீதம் நீர்ப்பரப்பால் ஆனது. இந்த எழுபது சதவீத நீர்ப்பரப்பில் 97.5 சதவீதம் கடலில் உவர்நீராகவும், மீதமுள்ள 2.5 சதவீதமே நன்னீராகவும் காணப்படுகின்றது. இந்த சதவீதக் கணக்கிலிருந்தே நன்னீர் எனப்படுவது ஓர் கிடைத்தற்கரிய வளம் எனும் தீர்மானத்துக்கு நாம் எளிதாக வந்துவிடமுடியும்.

ஆனால், இன்று உலகம் முழுவதும் நீர் ஓர் அரசியல் ஆகிவிட்டது. மட்டுமல்லாமல் வர்த்தக வியாபாரப் பண்டமும் ஆகிவிட்டது. இலங்கையின் வடமாகாணத்திலும் தண்ணீர் விற்பனைக்கு வந்துவிட்டது. இன்று தண்ணீரை ஒரு வர்த்தகப் பொருளாகக் கொண்டு மனிதர்களில் சிலர் வியாபாரம் செய்து வருகின்றனர். தமிழ்நாட்டின் இயற்கை அறிவியலாளர் நம்மாழ்வார் 'தண்ணீரை வானிலிருந்து வரவையுங்கள். பூமிக்குள் தேடாதீர்கள்' என்று கூறினார். பூமியை அரை அடிக்குத் தோண்டி மரங்களை நடுகை செய்வதில் அக்கறை கொண்டிராத மனித இனம் இன்று பூமியை நூறு அடிகளுக்கு கீழே கருப்பை வரைக்கும் துளையிட்டு தண்ணீரைத் தேடித்தேடி உறிஞ்சிக் கொண்டிருக்கிறது. இலவசமாகவும் கட்டுப்பாடின்றியும் தட்டுப்பாடின்றியும் கிடைத்துக் கொண்டிருந்த அள்ள அள்ளக் குறையாத ஓர் இயற்கை வளம் இன்று கட்டணப் பொருள் ஆகிக் கொண்டிருக்கும் பேராபத்து பற்றி எவரும் அச்சமோ, கவலையோ கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

## வர்த்தகமாகும் தண்ணீர்

தண்ணீர் இனி பொதுச் சொத்தல்ல. அது அரசுக்கோ, அரசு சுட்டுவிரல் காட்டும் ஓர் இலாப நோக்கமுடைய அமைப்புக்கோ, ஓர் தனியாள் முதலாளிக்கோ, அல்லது அரசுக்கு தரகுப்பணம் கொடுக்கும் ஓர் பல்தேசிய நிறுவனத்துக்கோ சொந்தமானது எனும் ஒரு மாபியா நடைமுறையை நோக்கி உலகமயமாதலின் விளைவு போய்க்கொண்டிருக்கிறது. சேவைத் தொழில்களான கல்வி, மருதத்துவம் என்பன பணம் சம்பாதிக்கும் துறைகளாகி மக்களை அச்சுறுத்துவதைப் போலவே தண்ணீர் விற்பனையும் கோடிகளில் இலாபம் பார்க்கும் ஒரு வர்த்தக தொழில்துறையாக இன்று மேலெழுந்து வருகிறது. ஒரு நாட்டின் வளத்தையும் அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் அந்த நாட்டில் பாயும் செழிப்பான ஆற்றுப்படுக்கைகளோ அல்லது காய்ந்து உலர்ந்த வறண்ட பூமியோதான் தீர்மானிக்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளையும் ஆபிரிக்கா கண்ட நாடுகளையும் இதற்கு சாட்சியாகக் காணமுடியும்.

யாழ். தீபகற்பத்தை தாங்கிப் பிடித்துக்கொண்டிருப்பது மயோசீன் சுண்ணாம்பு பீடபூமிகள் தான். புவிசார் நிலபுல அமைப்பில் வட மாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைப் போன்று நீண்ட ஆறுகளையும், பாரிய குளங்களையும் கொண்டிருக்கும் ஒரு நிலப்பிரதேசம் அல்ல யாழ்ப்பாணம். அப்படியென்றால் வருடம் முழுவதும் பயன்பாட்டுக்குத் தேவையான நீரை யாழ். மாவட்டம் எங்கிருந்து பெற்றுக் கொள்கின்றது? என்று மக்கள் எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்திருக்கின்றார்களா? யாழ். குடாநாடு இயற்கையாகவே பெரிய நீர்த்தேக்கங்களைக் கொண்டிருக்கவும் இல்லை. பின்னாளில் மன்னர் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றுவரைக்கும் யாழ்ப்பாணத்துக்கென்று விசேசமாக நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்படவும் இல்லை. ஆனால் ஏழு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு அடிப்படையாக இருப்பது ஆறுகளோ குளங்களோ அல்ல தரைக்கீழ் நீர்தான். இலங்கையின் உலர் வலயத்தில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களில் விசாலமான நிலப்பரப்பு இருந்தபோதும்கூட நிலத்தோற்ற அளவில் சிறியதாகவுள்ள யாழ்.குடாநாட்டில் மக்கள் அதிகமாகவும் சனத்தொகைச் செறிவாகவும் வாழக் காரணமே இந்த தரைக்கீழ் நீர்தான். இலங்கைத் தீவில் தரைக்கு அடியில் இருந்து பெறப்படும் நன்னீரை அதிகமாகப் பயன்படுத்தும் இடமும் யாழ்ப்பாணக் குடாநாடுதான்.

இந்த தரைக்கீழ் நன்னீரை குடிக்கவும் விவசாயத்துக்கும், பிற தேவைகளுக்கும் மக்கள் பயன்படுத்துகின்றார்கள் என்றால் அதற்கு எங்கிருந்து நீர்வரத்துக் கிடைக்கின்றது? மலைகளோ மலைகளிலிருந்து ஊற்றெடுத்து ஓடிவரும் ஆறுகளோ யாழ்ப்பாணத்தில் இல்லாதபோது தரைக்கீழுக்கு நன்னீரை வழங்கும் ஒரேயொரு நன்னீர் ஆதாரமே மழைவீழ்ச்சி தான்!. யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்ற தரைக்கீழ் நீர்வளம் பலஆயிரம் வருடங்களாக நடைபெற்று வந்த சேமிப்பின் பலனாகவே ஏற்பட்டதாகும். ஆனால் இருபதாம் நூற்றாண்டில் வாழ்விடத்தேவை, விவசாயத்தேவை, சுகாதாரத்தேவை, கைத்தொழில் தேவை, நாகரிகத்தேவை என்பவற்றின் பெருக்கமும் மற்றும் கட்டுப்பாடற்ற உபயோகமும் இந்த தரைக்கீழ் நீர்வளம் பாதிப்படைவதற்குப் பிரதானமான காரணமாயிற்று.

## தண்ணீரின் இருப்பை உறுதி செய்வதற்கு


50 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்.குடாநாட்டில் கிடைக்கக்கூடியதாக இருந்த தரைக்கீழ் நன்னீரின் அளவையும் தரத்தையும் கொண்ட பழைய சமநிலையைப் போன்று மீண்டும் கொண்டுவர வேண்டுமாயின் இங்கு பெய்கின்ற மழைநீர் முழுவதையும் தேக்கி நிலத்துக்குக்கீழே உட்செலுத்தவேண்டும். அதற்கு ஆயிரக்கணக்கான சிறு குண்டுகளைத் தோண்டி அதன் மூலம் சாதிக்கலாம் என்ற கருத்தை ஆசிய அபிவிருத்தி வங்கி முன்மொழிந்திருக்கிறது.



வங்காள விரிகுடாவிலிருந்து வரும் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறும் யாழ். குடாநாடு ஆண்டுதோறும் சராசரியாக ஆயிரத்து 231 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியைப் பெறுகிறது. ஒரு நடப்பு ஆண்டில் பெய்கின்ற மழைநீர் தான் அடுத்துவரும் ஆண்டுகளுக்கான நமது நீர்த்தேவையை பூர்த்தி செய்கிறது. பெய்கின்ற மழைநீர் முழுவதையும் நிலத்துக்குக் கீழே உச்சஅளவில் உட்புக விட்டதன் பின்னர் மேலதிகமாக உள்ள நீரையே கடலில் சென்று கலக்க நாம் அனுமதிக்க வேண்டும். குளங்களிலும் வயல் வளவுகளிலும் நீரைத்தேக்கும் போது தரைக்கீழ் நீர் மட்டம் அதிகரிப்பது மட்டுமல்லாமல் உவர்நீர் பகுதிகள் செறிவு குறைந்து நன்னீர் பகுதிகளாக மாறக்கூடிய வாய்ப்பும் அதிகமாகவே உண்டு.

(மறுபக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நவீன யுகத்தினை வெற்றிகொள்வதற்கான விதியில் இலட்சியம்...




பத்மசேனன் சனோசன் (பி.ஏ)
*எழுத்தாளர்,*
*ஊக்குவிப்பு பயிற்சி பயிற்றுவிப்பாளர்,*
*சண்மூன் இன்ஸ்பிரேசன் நிறுவன இயக்குநர்.*

இந்த உலகில் பிறந்த ஒவ்வொரு உயிருக்கும் அதற்கான காரணம் இருக்கிறது. வெறுமனே காரணம் இன்றி எவையும் இப்பூமிப்பந்தில் படைக்கப்படவில்லை. அதில் மனிதன் முக்கியமான படைப்பு. எனவேதான் அனைத்து உயிர்களையும் கொண்டு இந்த உலகை மனிதன் அழகு பார்க்கவேண்டும் என்று இறைவன் விரும்புகின்றார். ஆனால் அந்த விருப்பத்தை எவ்வளவு தூரம் நாம் நிறைவேற்றுகிறோம் என்பதுதான் கேள்வியாக இருக்கிறது. இப்படியாக எமது எண்ணம், சொல், செயல் இப்பூமியை அழகு பார்க்க வேண்டுமாக இருந்தால், எமது பிறப்பிற்கான பெறுமதியினை நாம் பிரதிபலிக்க வேண்டுமாக இருந்தால், நிச்சயமாக வாழ்க்கையில் இலட்சியத்தை கொண்டிருக்கவேண்டும் என்பதே இவ்வெற்றிக்கான விதியாகும். பொதுவாக இலட்சியம் என்றாலே அதற்கு ஒரு துடிப்பு இருக்கத்தான் செய்யும். உலகில் தோன்றி மறைந்த பல்வேறு மனிதர்களை நாம் எங்களுடைய வாழ்க்கையில் கண்டிருப்போம், அறிந்திருப்போம். அவர்களிடம் இலட்சியம் என்ற ஒன்று இல்லாமல் இருந்திருந்தால் முகவரியற்ற கடிதங்களைப் போன்று அவர்களும் எங்கோ சென்றிருப்பார்கள். அவர்களின் நோக்கம் என்ன என்பதை தெளிவாக ஆழ்மனத்தின் உதவியுடன் கண்டுகொண்டு அதற்கு ஏற்றால்போல் செயற்பட்டார்கள். அப்துல்கலாம் அவருடைய சிறுபராயத்தில் கல்வியில் பல்வேறு துன்பங்களை அனுபவித்தவர். இவர் தன்னுடைய வாழ்க்கையின் இலட்சியத்தில் அதிகம் கவனம் செலுத்தியதால் பின்னாளில் உலகம் போற்றும் ஒரு விஞ்ஞானியாக, இந்தியாவின் ஜனாதிபதியாக வலம் வந்தார். பல்வேறு தடைகள், தோல்விகள் வந்தபோதும் அவர் தன்னுடைய இலட்சியமான தூய வாழ்க்கை பயணத்தில் இருந்து ஒருபோதும் தடம் புரண்டதில்லை. இலட்சியம், எந்தவொரு மனிதனையும் எந்தவொரு உச்சிக்கும் கொண்டு செல்லத்தயங்குவதில்லை. நாம் தான் தயங்குகின்றோம் என்பதுதான் மோசமான விடயமாகும்.

ராபின் சர்மா 'வாழ்க்கையின் சோகம் சாதல் அல்ல, ஆனால், நாம் வாழும் பொழுதே நமக்குள் இருப்பதை சாகவிடுவதே" என்று கூறியுள்ளார். இந்த வெற்றியின் விதியினை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்கள் இப்போது, எவ்விதமான இலட்சியத்தினைக் கொண்டிருப்பவர்களாக இருந்தாலும், அவ்வாறு எந்தவிதமான இலட்சியமும் இல்லை என்றாலும் பரவாயில்லை, இந்த நிமிடத்தில் உங்கள் எண்ணங்களை மேம்படுத்தி. உங்கள் இலட்சியத்தினைத் தீர்மானியுங்கள். இன்னும் அதனைத் தெளிவாக்குங்கள். அப்போதுதான் நாம் செல்லும் பாதையும் தெளிவாக தெரியவாய்ப்பு ஏற்படும். இலட்சியம் தெளிவாக. உண்மையாக இருக்கும் போது, நாம் செல்லும் பாதையும் தெளிவும், உண்மையும் நிறைந்ததாக காணப்படும். இந்த உலகில் சிலர் மட்டும் வெற்றியாளர்களாக இருப்பதற்கு அவர்கள் இலட்சியம் மீது கொண்ட ஆர்வமும், தெளிவும் காரணமாக இருக்கிறது என்பதோடு அவர்களின் செயற்பாட்டை உலகம் அதிகம் ஏற்றுக்கொள்ளும், அவர்களை அன்போடு வரவேற்கும். அவர்களால் பல்வேறு நன்மைகள் உண்டாகும். ஆனால் இவ்வாறு இலட்சியம் இல்லாது எப்படியான வாழ்க்கையாவது வாழ்ந்துவிட்டு சென்றுவிடுவோம் என்று எண்ணுபவர்களின் சுமையை தாங்கத்தான் இந்த உலகம் அதிகம் விரும்புவதில்லை. அவர்களால் நன்மைகளைவிடத் தீமைகளே அதிகம் ஏற்படுகின்றன. இதனால்தான் சண்டைகள், கொலைகள், சமூகத்துக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகள் நாளாந்தம் இடம் பெறுகின்றன. இதனால் தனிநபர், சமூகம், நாடு, உலகம் என்று அனைத்துமே பாதிக்கப்படுகின்றன.

இப்போது இவ்வெற்றிக்கான விதியின் தொடக்கத்தில் கூறப்பட்ட விடயத்துக்கு மீண்டும் வருகின்றேன். நாம் இந்த உலகில் பிறந்தமைக்கான காரணம் இருக்கிறது. அதனை நாம் ஓர் இலட்சியமாக உருவாக்கி, அதனை அடைவதற்காக இயற்கை, இறைவன் மற்றும் சக மனிதர்களின் உதவியினைப் பெற்று முழுமையாகச் செயற்பட வேண்டும். அப்போதுதான் இயற்கை நம்மிடம் எதிர்பார்க்கும் விடயத்தை நாம் செய்து முடிக்கலாம் என்பதோடு, எங்களின் பலனை இந்த உலகத்தில் விதைத்துச் செல்லமுடியும். வாழ்க்கையின் இலட்சியத்தைக் கண்டுகொண்டு எங்கள் வாழ்வை வெற்றிகரமாக உருவாக்கிடுவோம்.



# தண்ணீர்...

இப்படித் தேக்கப்படும் நீரே யாழ்.குடாநாட்டின் தரைக்கீழ் நீரின் மீள்நிரம்பலை உத்தரவாதப்படுத்தும். தேங்கி நிற்பதால் மட்டுமே நிலத்தடி நீர் மீளச்சேமிக்கப்படும் என்ற சித்தாந்தத்துக்கேற்ப ஆனையிறவு, தொண்டைமானாறு கடல்நீரேரிகளையும் நன்னீர் ஏரிகளாக மாற்றுவதற்காக தற்போது நன்னீர் திட்டங்கள் பிரயோகிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இருப்பினும் நாம் இங்கு என்ன செய்துகொண்டிருக்கின்றோம்? தண்ணீர் அள்ள அள்ளக் குறையாமல் பெருக்கெடுத்துக் கொண்டேயிருக்கும் என்கிற தவறான ஓர் புரிதலை நம்முள்ளே வளர்த்துக்கொண்டு தண்ணீரை எப்படியும் நுகரலாம் எனும் போக்கில் துஷ்பிரயோகம் செய்துகொண்டிருக்கிறோம்.

## தண்ணீரின் மீள் சுழற்சியை உறுதிப்படுத்துகின்றோமா?

போருக்குப் பின்னரான சூழலில் பொருளாதார நிலைமைகளின் காரணமாக குழாய்க் கிணறுகள் தோண்டுவதே குறைந்தளவு பணச்செலவாக இருப்பதால் பல குடும்பங்களுக்கும் வசதியான இலகுவான தெரிவாக குழாய்க்கிணறுகளே இருக்கின்றன. இப்படி கட்டுப்பாடற்ற ஆழ்துளைக் கிணறுகளின் பெருக்கத்தாலும் அசுரத்தனமாக நீரை உறிஞ்சி வெளியேதள்ளும் உயர்வலு கொண்ட நீர் இறைக்கும் இயந்திரங்களின் அதீத பாவனையாலும் நன்னீருக்கான நெருக்கடி மேலும் அதிகரித்துவிட்டது. குடும்பங்களின் சந்ததிவழி ரீதியான நிலஉடைமை சொத்துப் பிரிப்புகளினால் ஏற்பட்டுள்ள இடநெருக்கத்தாலும் சனத்தொகை அடர்த்தியினாலும் வெளியேற்றப்படுகின்ற கழிவுகளினாலும் தரைக்கீழ்நீர் மாசடைந்து வருகின்றது. காணி ஒன்றை வாங்கும் போது அந்தப் பகுதியில் தூயநீர் இருக்கிறதா? என்பதையே தமது முதல் தெரிவாகப் பார்க்கும் நம்மில் பலரும் மழைக்காலங்களில் நீர்தேங்கி நிற்காத வளவுகளையே விரும்புகின்றனர். விவசாய விளைநிலங்களைக்கூட மண்கொண்டு நிரப்பி குடியிருப்பு காணிகளாக்கி கட்டடங்களை எழுப்புகின்றனர். ஒரு துண்டுநிலம் கிடைத்தால்கூட அந்தத் துண்டுநிலம் முழுவதும் விஸ்தரித்துப் பரப்பி கட்டடங்களை கட்டிய பின்னர் எஞ்சியுள்ள சிறுதுண்டு முற்றத்துக்கும் சிமெந்து கற்களை பதித்து மறைத்து விடுகின்றனர். தமது வீட்டுக்கூரைகளின் மேல் பொழியும் மிகக்குறைந்தளவு மழைநீரைக்கூட வெள்ள அபாயம் என்று கூறிக்கொண்டு வீட்டுவளவின் சுற்றுமதில்களில் துளைவைத்து பொதுப்போக்குவரத்து வீதிக்கே திருப்பி விடுகின்றனர். இப்படிச் செய்தால் கிணறுகள் எப்படி நீரைச் சுரக்கும்? கிணற்றுக்கு எங்கிருந்து நீர்வரத்துக் கிடைக்கும்? நீர்மட்டம் பட்டைக் கிடங்கையும் தாண்டிக் கீழிறங்கி கிணறுகள் வற்றியே போகும். நமது தேவைக்காக எவ்வளவு நீரை வெளியே உறிஞ்சி எடுக்கின்றோமோ அதைப்போல இருமடங்காக தரைக்கு கீழே நீரை உட்புக அனுமதிக்கவேண்டும். தரைக்கீழ் நீரை மீள்நிரப்பி புதுப்பிப்பது என்பது கிடைக்கும் மழைநீரின் அளவிலேயே தங்கியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் குடாநாட்டு மக்களின் அதிகளவு நீர்ப்பாவனை மற்றும் நீர்விரயம் தான் எதிர்கால நீர் பேணுகையைப் பற்றி தமிழ்ச் சமூகத்தை அதிகம் சிந்திக்க வைக்கிறது என்றும் கருதலாம். நாம் அதிக நீரை வெளியேற்றுவதைக் கட்டுப்படுத்த வேண்டும். நீரைச் சேமிக்கவேண்டும். நீர் சேமிப்பின் முழு நோக்கமும் விரயமாகும் நீரை மறித்து குளங்கள், கேணிகள் ஆகியவற்றில் தேக்குவதுடன் தரையின் அடியில் சென்று சேருமாறு செய்வதேயாகும். இதை நாம் ஒரு கூட்டுச்சமூகமாக செய்தாக வேண்டும். குளங்கள் தான் மேலதிக மழைநீரைத் தரையின் கீழ் கொண்டுசெல்லும் துவாரங்கள் எனலாம். 1975 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி யாழ். குடாநாட்டில் 615 குளங்கள் இருந்துள்ளன. 1970களில் சிறப்பாக இயங்கிய ஊற்று நிறுவனத்தால் யாழ். குடாநாட்டில் 1986 இல் 34 குளங்களும் 1987 இல் 2 குளங்களும் 1988இல் 17 குளங்களும், 1991இல் 50 குளங்களும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. 31 குளங்களையும், 32 வாய்க்கால்களையும் 5 உவர்நீர் தடுப்பு அணைகளையும் ஊற்று நிறுவனத்தினர் புனரமைத்து திருத்தியுள்ளனர். இன்றைக்கு தமிழ்ச் செயற்பாட்டுத்தளத்தில் அப்படியொரு புரட்சிகர தரிசனங்களை காணக்கிடைக்காமையும் துயரம்தான்.


## தங்கத்திரவம்

ஒரு சொட்டு நீரின் விலை ஒரு சொட்டு பெற்றோலின் விலையை விடவும் கூடுதலான பெறுமதியை அடையக்கூடிய காலம் மிகவும் தொலைவில் இல்லை என்று ஆர்ஜென்டினாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் நீரியல் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட சிரியாவின் பிரதிநிதி சவூப் கௌல் கூறியுள்ளார். போத்தலில் தண்ணீர் அடைக்கப்பட்டிருந்தால் அது சுகாதாரமானது என்ற மனநிலை நம்முள் பலருக்கும் வந்துவிட்டது. பிளாஸ்ரிக் போத்தல்களை நாம் ஒருமுறை மட்டும் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறிகிறோம். அப்படி ஒரு வாரத்தில் நாம் குடித்துவிட்டு தூக்கியெறியும் வெற்று பிளாஸ்ரிக் போத்தல்களைக் கொண்டு பூமியை 3 சுற்றுகள் கட்டலாம் என்று எச்சரிக்கிறார்கள் சூழலியல் அறிஞர்கள். தண்ணீர் விற்பனைப் பொருள் இல்லை. தண்ணீர் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை. ஆதலால் நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் தூயதண்ணீர் இலவசமாகக் கிடைப்பதை உறுதி செய்வது அரசின் கடமை! பூமியில் உள்ள எல்லா உயிர்களுக்கும் பொதுவான இயற்கையின் இலவச தண்ணீர் தனி ஒருவரின் சொத்துடைமையாக விற்பனைக்கு வருவது நல்ல அறிகுறியல்ல. மனிதர்கள் பணம் கொடுத்து தண்ணீரை வாங்கிவிடுவார்கள் எனில் விலங்குகளும், பறவைகளும், மரங்களும் தண்ணீரை எங்கே போய் தேடும்? ஒவ்வொருவரும் தமக்குள்ள பொறுப்புகளை உணர்ந்து நீர்தரும் மூலங்களைப் பராமரித்துப் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு அவற்றை கையளிக்கவேண்டும். ஏனெனில் நமது தண்ணீர் நமது உரிமை மட்டுமல்ல உயிர்களின் உரிமையும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தியாக தீபத்துக்காக ஓர் ஓவியம்!

தியாகதீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு மாணவர்களுக்காக தியாகதீபம் திலீபன் ஞாபகார்த்த சித்திரப் போட்டி, தியாகதீபம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நல்லூரில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. சிறுவர்கள் உட்படப் பலரும் போட்டியின் ஆரம்பநாளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.



# தற்கால நவீன சமூகமும் பெண் மீதான வன்முறைகளும்

■ கௌசிகா ஜெகதீஸ்வரன்
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்



நவீன தொழில்நுட்ப காலாதிக்கமான இன்றைய காலத்தில் வன்முறைகள் என்பன நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. பெண்களுக்கெதிரான வன்முறை, அடக்குமுறை என்பவை விடை காணமுடியாத கேள்விகளாகவே தொடர்ந்து கொண்டு செல்கின்றன.மகாகவி பாரதி பெண் அடிமைத்தனத்தை நீக்கியிருந்தாலும் அது இன்னும் குறைந்தபாடில்லை. இன்றைக்கும் சில ஆண்கள் பெண்களை கைப்பொம்மை போல செயற்படுத்துவதை காணமுடிகிறது. நாட்டில் நிலையாக வாழ்ந்த சமூகமானது போரினால் புலம்பெயர்ந்தும், வேலைவாய்பைத் தேடியும், பொருளாதாரத்தை இழந்து வறுமைக்கோட்டுக்கு தள்ளப்பட்ட சூழல்களும் உருவானமையால் கலாசார ஒழுக்க விழுமியங்களை பேணிக்காக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. வாழ்வின் குழப்ப நிலையின் பின்புலத்தில் எமது சமுதாயத்தில் பெண்ணுரிமை பற்றி ஆராய்தல் பொருத்தமானதாகும்.

எமது தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையில் பெண்ணின் பங்களிப்பு என்பது கல்வி கேள்விசார் விடயத்துடன் வளர்ச்சியடைந்திருப்பதுடன் உயர்நிலைப் பதவிகளையும் வகித்து சமுதாயத்தை நெறிப்படுத்தும் வாய்ப்பை ஓரளவு வழங்கியுள்ளது என்பதை ஏற்கத்தான் வேண்டும். ஆனால், பெண்கள் பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் இடர்பாடுகளை சந்திக்கும் இடமாகவும் எமது சமுதாயம் மாறியுள்ளது என்றால் அதை மறுப்பதற்கில்லை.

அர்த்தமுள்ள வாழ்க்கை நெறிமுறைகளைப் பின்பற்றி ஒழுகவேண்டிய அரசியல் பற்றிய தெளிவூட்டல்களுக்கு அப்பால், சுயநலத் தேவைப்பாட்டுடன் சமூகக் கட்டமைப்பாக மாற்றம் பெற்றுள்ளமை அதன் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை தொடரமுடியாத வகையில் ஒரு தெளிவற்ற போக்கை கொண்டுள்ளது. இதேவேளை பூகோளமயமாக்கலின் விளைவால் அறிமுகமான நவின தொடர்பாடல் சாதனங்களான கைத்தொலைப்பேசி, தொலைக்காட்சி போன்றவற்றால் தோன்றும் தனி மனிதப் பிரச்சினைகள் காலப்போக்கில் சமூகப் பிரச்சினைகளாக திரிபடைகின்றன. வணிக இலாபத்தை நோக்காகக் கொண்டு காம எண்ணங்களை தூண்டக்கூடிய வகையில் வெளிவிடப்படும் ஆபாச திரைப்படக் குப்பைகளால் ஒழுக்கச் சீர்கேடுகள் அதிகரிக்கின்றன. அதன் உச்சக்கட்டமாக பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இதனால் கொலைகளும், தற்கொலைகளும் சம்பவிக்கின்றன. மேலும் பல பெண்களின் வாழ்வு தவறான பாதையை தெரிவுசெய்து பயணிக்கிறது. வன்முறைகளுக்கு பல குடும்பச்சூழலும் காரணமாகின்றன. பெண்கள் அடிமைப்பட்டு வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தந்தை மகளையும், சகோதரன் சகோதரியையும் வன்புணர்வுக்குட்படுத்தும் அருவருக்கத்தக்க கேவலமான விடயங்களும் நடைபெற்றவண்ணமுள்ளன.


இன்றைய பொருளாதார சூழ்நிலையில் வாழ்வாதார தேவைக்காக பெண்களும் உழைக்கவேண்டியுள்ளது. இருப்பினும் சில தொழில் ஸ்தாபனங்களில் பெண்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறியாகவே உள்ளது. எங்குதான் பெண்கள் சுதந்திரமாகச் செயற்படுவது? என்றுதான் பெண் வன்கொடுமைகளுக்கு முடிவு வரப்போகிறது? விஷம எண்ணங்களும், வக்கிர புத்தியும் மேலோங்கும் போது அந்தச் சமூகம் நலிவடைவது நிச்சயம். 'எந்த சமுதாயத்தில் பெண்கள் மதிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்களோ? அந்தச் சமுதாயம் வளர்ந்து உச்ச நிலையை அடையும்' என சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுவதிலிருந்து பெண்மையின் முக்கியத்துவத்தை உணரலாம்.

நவீன விஞ்ஞான உலகின் வளர்சிக்கு மட்டுமல்லாது நமது அன்றாட வாழ்வுக்கும் ஆற்றல் உதவுகிறது. ஆற்றலை மேம்படுத்தும் சக்தியே பெண். இதனால் தான் பெண்மையிலிருந்து வரும் தாய்மை போற்றப்படுகிறது. அத்தகைய தாய்மை எனும் புனிதத்துவம் நிறைந்த பெண்ணினத்தின் மீதான வன்முறைகளைத்தடுத்து, உரிமைகளை வழங்கி, நம்பிக்கையைக் கொடுத்து அவர்களின் ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆவது நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

மலர்வு 16 . 05 . 1979



உதிர்வு 28 . 08 . 2024

கடந்த 28.08.2024 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

## இராசையா தர்மசேனன் (தர்மு)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (25.09.2024) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் எதிர்வரும் (27.09.2024) வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது மேற்படி ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் குடும்பசகிதம் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் யாழ் போதனா வைத்திய சாலையில் அந்த நேரம் பணியாற்றிய வைத்தியர்கள் தாதியர்கள் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அயலவர்கள் நண்பர்கள் உறவினர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளியூரிலிருந்து தொலைபேசியூடாகவும் முகநூல் மின்னஞ்சல் RIP Book மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையங்கள் வைத்தவர்களுக்கும் ஆத்ம சாந்திக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும் கிரியை செய்த குருமார்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்கள் அஞ்சலிப் பதாகைகளை வைத்தவர்களுக்கும் இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்குபற்றியவர்கள் இன்று வரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கைதடி வடக்கு.**
Whats app :- 074 112 2823
Phone no :- 077 591 1824

**தகவல் :**
**குடும்பத்தினர்.**
**அப்பா, அம்மா, மனைவி, மாமி, அண்ணா, பிள்ளைகள்.**

(Cs/1427) J-1

# மாணவன் துஷ்பிரயோகம் ஆசிரியை நேற்றுக் கைது

வவுனியாவில் 14 வயது மாணவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பாடசாலையில் முறைப்பாடு செய்தும் தீர்வு கிடைக்காத நிலையில் மாணவனின் பெற்றோரால் சிறுவர் பிரிவு மற்றும் வவுனியா பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்தே அந்த ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

மாணவன் மருத்துவப் பரிசோதனைக்காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். வாக்கு மூலத்தின் அடிப்படையில் பயிலுனர் ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-18)

# 18 மாதக் குழந்தையைக் கொன்ற தாய் கைது!

கொழும்பு, செப். 25

தனது 18 மாத பெண் குழந்தையை தாயொருவர் கொலைசெய்துள்ள கொடூரச் சம்பவம் கலஹாவில் இடம்பெற்றுள்ளது.

21 வயது இளம் தாயொருவரே இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்டுள்ளார். அவரை கலஹா பொலிஸார் கைது செய்துள்ளனர். குழந்தையை தாக்கியும், மூச்சடைக்க வைத்துமே கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இவற்றை தொலைபேசியில் வீடியோ எடுத்து வைத்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (ம-44)

## வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hard ware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**077 077 6469, 077 494 9683**

(CS/56290) J-1

## வேலைவாய்ப்பு

பிரசித்திபெற்ற தனியார் நிறுவனமொன்றில் வேலைவாய்ப்பு உள்ளது.

தகைமைகள் : க.பொ.த சாதாரண தரம் கணிதம் உட்பட 06 பாட சித்தி.

வயதெல்லை : 19 - 55 வயது. ஆண் , பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு : வடமராட்சி எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- **077 562 1487**

(CS/28727) J-1

# மரண அறிவித்தல்

## திருமதி சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி (ராசாத்தி)



தோற்றம்
10.05.1936

மறைவு
22.09.2024

இணுவில் மஞ்சத்தடியைப் பிறப்பிடமாகவும், செட்டிவளவு ஒழுங்கை, இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையாபிள்ளை சரோஜினிதேவி (ராசாத்தி) அவர்கள் கடந்த (22.09.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையாபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ப்ரமு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், விக்கினேஸ்வரராஜா, மகேஷ்வரன் (கனடா), காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் ஜெயகௌரி, ஆனந்தகௌரி (சமுர்த்தி முகாமையாளர் - சண்டிலிப்பாய்), அற்புதகௌரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரவதனி, விமலாதேவி (கனடா), சிவகுமார் (குமார் பந்தல்), ஜெயக்குமார், சற்குணதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான மங்கையற்கரசி, ஆயிலியம், ஞானானந்தம், சதானந்தம் மற்றும் ஜெயமணி (நீர்கொழும்பு), சச்சிதானந்தம் (நீர்கொழும்பு), அன்னலட்சுமி, அருளானந்தம் (கனடா), புஷ்பராணி (கனடா), செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, பூபாலசிங்கம், யோகம்மா மற்றும் தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், எழிலன் - நிருத்தனா, கஜானன் - கஸ்தூரி, பார்த்தீபன், ஹரிகரன், சஜீபன், அனோஜன், கௌசிகன், சந்தியா, லக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2024) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு :-**
**விக்கினேஷ்வரராஜா (மகன்) - 077 553 9964**
**சிவகுமார் (மருமகன் - குமார் பந்தல்) - 077 352 7715**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(CS/28988) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை,
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள்
பல்லாயிரக்கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப்
பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு துரிதமாகத்
திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

**077 138 7596, 071 999 9306**

(CS/56272) J-1


## பகிரங்க அறிவித்தல்


பூநகரி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட கௌதாரி முனை – கல்முனை தொடக்கம் பாலைதீவு - இரணைதீவு வரையான கரையோரப் பிரதேசங்களில் பொது தனியார் கூட்டாண்மைகள் (Public – Private Partnerships) கொள்கைக்கமைவாக மனம் கவரும் சுற்றுலா மையங்களை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைவாக, அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் இடங்கள் தொடர்பாக சுற்றுலாத்துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் பொது அமைப்புக்களிடமிருந்து ஆக்கபூர்வமான கருத்திட்டங்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம்.

தங்களது எழுத்து மூலமான கருத்துக்களை 15.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தங்களது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு செயலாளர், பூநகரி பிரதேச சபை, பூநகரி. என்ற முகவரிக்கு எழுத்து மூலமாகவோ நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல்கள் (poonakaryps@yahoo.com & pspoonakary@gmail.com) ஊடாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்
பூநகரி பிரதேச சபை (CR/43279) J-1 25.09.2024

## மரண அறிவித்தல்



### வேலாயுதபிள்ளை மகேந்திரன்

**(முன்னாள் தபால் ஊழியர் - கொக்குவில்)**

உடையார் ஒழுங்கை, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது ஜேர்மனி, லண்டன் ஆகிய நாடுகளில் வசித்தவருமான வேலாயுதபிள்ளை மகேந்திரன் அவர்கள் கடந்த 17.09.2024 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - இராசம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சின்னமணி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாலினியின் அன்புக் கணவரும், உபாசினி (ஜேர்மனி), உசாயினி (ஜேர்மனி) உசாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயசேகரன் (ஜேர்மனி), தே.கஜேந்திரன் (ஜேர்மனி), ச.கஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பாரத், ராகுல் , சித்தார்த், ஆதித்யா, அவுரா, அஹ்ரானா ஆகியோரின் அன்புப் பாட்டனும், சித்திரா, சுபத்திரா, வரதா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நாளை (26.09.2024) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணி தொடக்கம் 12 மணி வரை நடைபெறும். விலாசம் - Krematorium Berlin (Bounnschulenweg) Kiefholistr - 221, 12437 Berlin. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல் :**
ஆனந்தநடராசா சுபத்திரா - 075 699 1957
புகையிரத வீதி, கொக்குவில்.
உசாயினி கஜேந்திரன் (ஜேர்மனி)- 0049 176 202 29745

(CS/1439) J-1

## ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபை
### உப அலுவலகம், ஏழாலை.
### வட்டாரம்-03, மயிலங்காடு சூராவத்தை வீதி, ஆதன இல - 11/3

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட மயிலங்காடு சூராவத்தை வீதி, ஏழாலை தெற்கு, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம்-03, மயிலங்காடு சூராவத்தை வீதியில், ஆதன இல: 11/3 ல் R. Ampalam எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் முகதாவில் வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி, மல்லாகம் கோவிற்பற்று, ஏழாலை தெற்கு கிராமம், வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/203 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள ஏழாலை தெற்கு இறை "கோணான்டிக் கலட்டி" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 3 குழி 0.777 உடைய ஆதனமானது 2004.05.18 ஆம் திகதிய 3032 ஆம் இலக்க உறுதி மூலம் சிவரத்தினம் சிவசங்கரினால் வெளிப்படுத்தல் செய்யப்பட்டு, பின்னர் 4735ஆம் இலக்க 2004.10.25ஆம் திகதியில் பிரசித்த நொத்தாரிசு ந. தம்பிமுத்தன் எழுதிய அறுதி உறுதி வாயிலாக சிவரத்தினம் சிவசங்கரிடமிருந்து ஜெயந்திரம் பெண் உமாவதியைச் சென்றடைகின்றது.

அதன் எல்லைகளாக,
கிழக்கு- ஆறுமுகம் குணத்தின் ஆதனம்
வடக்கு- இதன் மிகுதி ஆதனமும் 12 அடி அகலப் பாதை முகப்பும்.
மேற்கு- இளையதம்பி சூசைமுத்துவின் ஆதனம்.
தெற்கு- சரவணை தர்மலிங்கத்திற்கும் மறுபெயருக்கும் உரிய ஆதனம்.

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் V. Thavarajah அவர்களால் 2024.08.24 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 6360 ஆம் இலக்க வரைபடத்தில் LotA ஆகிய நிலப்பரப்பு 2 குழி 7. 2 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு ந. தம்பிமுத்தன் அவர்கள் மூலம் 2004.10.25 ஆம் திகதிய 4735 ஆம் இலக்க அறுதி உறுதியால், மயிலங்காடு சூராவத்தை வீதி ஏழாலை தெற்கு சுன்னாகம் என்னும் இடத்தை சேர்ந்த ஜெயந்திரம் பெண் உமாவதி (745053874V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது ஜெயந்திரம் பெண் உமாவதி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.


மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம்.

(CS/56297) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 01 . 1957



மறைவு 23 . 09 . 2024

### மார்க்கண்டு ஜோதிமார்க்கண்டு (சோதி)

உடுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஜோதிமார்க்கண்டு நேற்று முன்தினம் (23.09.2024) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - நீலாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விஜயசிங்கம் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயகுமாரியின் அன்புக் கணவரும், திவ்ஜன் (அஞ்சல் அதிபர்), விந்துஜன், வாமினி, ஷர்ஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மீனலோஜினி, குமாரமார்க்கண்டன், பாலமார்க்கண்டன், சாந்தினி, பவானி மற்றும் சறோஜினி, பத்மினி (கனடா), இராஜமார்க்கண்டன், இரஞ்சினி (இத்தாலி), விஜயமார்க்கண்டன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாபரன், (தயா அச்சகம்), விஜயராணி (பிரான்ஸ்), விஜயதேவி, தயானந்தன் (கலா சோடா), விஜயகௌரி, விஜயகலா (உரிமையாளர் கோறல் ரேஸ்ரி இன்டஸ்ரிஸ்), தயாபாலன் (ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
குடும்பத்தினர்
077 918 0828
078 383 5354

(CS/56282) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப். 30க்கு முன் சா/த பெறுபேறு!

கொழும்பு, செப். 25

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இம்முறை சாதாரணதரப் பரீட்சைக்கு 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 65 ஆயிரத்து 331 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

# திலீபனின் நினைவுப் பவனி நல்லூரை நாளை அடையும்

யாழ்ப்பாணம், செப். 25

தியாகதீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு நல்லூரை நோக்கிய அவரது நினைவு சுமந்த ஊர்திப் பவனி வவுனியா பொங்கு தமிழ் நினைவுத் தூபியடியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை அஞ்சலி நிகழ்வுடன் ஆரம்பமானது. இந்த ஊர்திப் பவனி வடமாகாணத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்று திலீபனின் நினைவுநாளான நாளை வியாழக்கிழமை காலை நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியை வந்தடையும். (ம-25-66)

# தனித்துக் களமிறங்க பெரமுன முடிவு!

கொழும்பு, செப். 25

நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனித்துக் களமிறங்கும் என்று அந்தக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கட்சிப் பிரமுகர்களுடன் பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கப்போவதில்லை எனவும் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ-ம-44)

# ஜனாதிபதி அநுரவுக்கு சவூதி அரேபியா வாழ்த்து

இரண்டு புனிதத் தலங்களின் சேவகரும், சவூதி மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸிஸ் அல் ஸஊத் மற்றும் முடிக்குரிய இளவரசரும் சவூதி பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோர் இலங்கை அநுரவுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர். (ம)

# மூன்று கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் ஒருவர் கைது!

மன்னார் தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ம-22-213)

## நாடாளுமன்று...

நேற்றுமுன்தினம் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருந்த அநுரகுமார திஸாநாயக்க, நேற்றையதினம் பிரதமரை நியமித்ததுடன் அமைச்சுகளின் நியமனங்களையும் வழங்கியிருந்தார். இதையடுத்தே, நேற்றையதினம் அவரால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றையதினம் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் தொடர்பான கருத்துகளை வெளிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி இன்று அறிவிப்புகளை வெளியிடுவார் என்று நம்பப்படுகின்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட மறுநாளிலிருந்து 10 தொடக்கம் 17 நாள்களுக்குள் வேட்புமனுக் கையேற்பு நடைபெற்று 5 தொடக்கம் 7 வாரங்களுக்குள் பொதுத்தேர்தலும் நடத்தப்படும். அதன் பிரகாரம் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. பொதுத்தேர்தல் நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், அடுத்த நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நவம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளதாகவும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம-26)

## வல்லாதிக்க...

வித்துள்ளார். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்ற பின்னர் சர்வதேச ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே, 'வலுவான சுயாதீன வெளிவிவகாரக் கொள்கை' என்ற அணுகுமுறைக்கான விருப்பத்தை ஜனாதிபதி அநுர வெளியிட்டுள்ளார்.

தனது தலைமைத்துவத்தின் கீழ் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இலங்கையின் இரண்டு நெருங்கிய அயல்நாடுகளான சீனா மற்றும் இந்தியாவுடன் சமநிலையான உறவுகளைப் பேண முயலும் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி, குறிப்பிட்ட ஒரு நாட்டுடன் தன்னை இணைத்துக் கொள்ளமுடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

புவிசார் அரசியல் மோதலில் நாங்கள் ஒரு பகுதியாக மாறமாட்டோம். எந்தத் தரப்புடனும் இணைந்துகொள்ளமாட்டோம். சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் துண்டாடப்படுவதற்கு நாங்கள் விரும்பவில்லை. இரண்டு நாடுகளும் பெறுமதிமிக்க நண்பர்கள், எங்கள் அரசாங்கத்தின் கீழ் நாங்கள் அவர்களின் நெருங்கிய சகாக்களாக மாறுவதை விரும்புகின்றோம். ஐரோப்பிய நாடுகளுடனும் இதேவேளை மத்திய கிழக்கு நாடுகளுடனும், ஆபிரிக்காவுடனும் சிறந்த உறவைப் பேணவே விரும்புகின்றோம் என்றும் ஜனாதிபதி அநுர மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

## தேர்தலில்...

போட்டியிட்டால் நல்லது. இதற்குரிய அழைப்பை நாம் முன்வைக்கின்றோம். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையையும், ஐக்கிய மக்கள் சக்தியினரையும் நாம் விசேட விதமாக அழைக்கின்றோம் என்றும் ருவான் விஜேவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார். (அ-ச-44)

## வடக்கு...

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் கடமையாற்றும் மாவட்டச் செயலர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்றும் ஏனைய நிர்வாகங்களிலும் பெரியளவான மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்றும் நம்பகமான தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-ம-ஒ-5-26)

## மத்திய...

கட்சியின் மத்தியசெயற்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு முரணாகச் செயற்பட்ட கட்சி உறுப்பினர்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாகவும் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-66-26)

## பிரதமராக...

யேற்றுக்கொண்டார். ஹரிணி அமரசூரிய, இலங்கையின் 28 ஆவது பிரதமராவார். அதேபோல இலங்கையில் பிரதமர் பதவியை வகிக்கும் மூன்றாவது பெண்ணாவார். அத்துடன், ஜனாதிபதி தலைமையில் புதிய அமைச்சரவையும் நேற்று நியமிக்கப்பட்டது.

இதன்படி பாதுகாப்பு, நிதி, பொருளாதார அபிவிருத்தி, தேசிய கொள்கைகள், திட்டமிடல் மற்றும் [illegible] சாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் ஆகிய அமைச்சுகள் ஜனாதிபதியின் வசம் உள்ளன.

நீதி, பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள், உள்ளாட்சி மற்றும் தொழில், கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், பெண்கள், சிறுவர்கள் மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு, வர்த்தகம், வாணிபம், உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி ஆகிய அமைச்சுகள் பிரதமருக்கு வழங்கப்பட்டுள்ளன.

புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, பொதுமக்கள் பாதுகாப்பு, வெளிவிவகாரம், சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை என அமைச்சரவை அந்தஸ்துள்ள 8 அமைச்சுகள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. (அ-ம-44-26)

## பிரதமர்...

பிரேமதாஸ நேற்றுத் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றம் கலைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்த பரபரப்புக்குள், கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், தானே பிரதமர் வேட்பாளர் என்பதை சஜித் உறுதிப்படுத்தியதுடன், நாடாளுமன்றத் தேர்தல் ஊடாக ஆளும் அதிகாரத்தை மக்கள் தமக்கு வழங்குவார்கள் எனவும் சஜித் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையை ஏற்கின்றேன். பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகி வருகின்றோம். ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே பயணம் தொடரும். முற்போக்கு சக்திகள் எம்முடன் கைகோர்க்கலாம்.

தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என ரணில் விக்கிரமசிங்க அறிவித்து விட்டார். பிறகு எப்படி அவருடன் இணைவது? பொதுத்தேர்தலில் பிரதமர் வேட்பாளராக என்னைக் களமிறங்குமாறு கட்சி அமைப்பாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக கோரிக்கை விடுத்தனர். ஜனநாயக ரீதியில் எடுக்கப்பட்ட முடிவு இது. பொதுத் தேர்தலில் மக்கள் எமக்கு ஆளும் அதிகாரத்தை வழங்குவார்கள் என நம்புகின்றோம்" - என்றார். (அ-ம-44)

## விஜித...

வெளிவிவகார அமைச்சுக்கு மேலதிகமாக புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடகத் துறை, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து, பொதுமக்கள் பாதுகாப்பு, சுற்றாடல், வனஜீவராசிகள், வன வளங்கள், நீர் வழங்கல், பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள், கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சுகளும் விஜித ஹேரத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (அ-ம)

## வடமாகாண...

ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவுசெய்யப்பட்ட பின்னர், முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர்கள் பதவி விலகியிருந்தனர். இந்த நிலையில், புதிய ஆளுநர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இன்றுமுதல் நியமனம் செய்யப்படவுள்ளனர். அதற்கமைவாக வடக்கு மாகாண ஆளுநராக யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் ஜனாதிபதி செயலகத்தில் இன்று முற்பகல் பதவியேற்கவுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாவட்டச்செயலராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நா.வேதநாயகன் அரசியல் பழிவாங்கலுக்கு அமைவாக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து அவர் உடனடியாகவே தனது ஓய்வை அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-ஒ-5-26)

## நிதி...

வலுசக்தி, விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடித்துறை ஆகிய அமைச்சுகளை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன, மதவாதம் தவிர்த்து ஆரோக்கிய பிரசாரங்கள்

## சர்வதேச கண்காணிப்புக் குழு பாராட்டு

**கொழும்பு, செப்.25**

**இம்முறை தேர்தல் பிரசாரக்களத்தில் இன, மதபேதங்களை முன்னிலைப்படுத்தி பிரிவினைகளை ஊக்குவிக்கக்கூடியவாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சு, பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு, மக்களின் அன்றாடப்பிரச்சினைகள் போன்ற மிகவும் அவசியமான விடயங்கள் பிரசார மேடைகளில் எதிரொலித்தமை பெரிதும் வரவேற்கத்தக்க ஆரோக்கியமானதொரு போக்காகும். இதனை ஏனைய நாடுகளுக்கான முன்னுதாரணமாகவும் சுட்டிக்காட்டமுடியும்.**

–இவ்வாறு சர்வதேச கண்காணிப்புக் குழு இலங்கைக்குப் பாராட்டு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் நச்சோ சன்செஸ் ஆமர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் கடந்தகால தேர்தல் செயன்முறைகளுடன் ஒப்பிடுகையில் இம்முறை குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் அவதானிக்கப்பட்டன. தேர்தல் பிரசார நிதி ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பிரயோகம், தனிநபர் தரவுப்பாதுகாப்புச் சட்டத்தின் பிரயோகம், புதிய வாக்காளர்கள் உள்வாங்கப்பட்டமை போன்றவற்றை அத்தகைய முன்னேற்றங் களாகக் குறிப்பிடமுடியும். அதேவேளை இந்தத் தேர்தலை நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளிப்படைத்தன்மையுடனும், செயற்றிறன்மிக்கவகையிலும், உரிய நியமங்களுக்கு அமைவாகவும் மிகச்சிறப்பாகச் செயற்பட்டது.

2022 ஆம் ஆண்டு இடம்பெற்ற 'அரகலய' போராட்டத்தின் பின்னர் முதலாவதாக நடைபெற்ற இந்தத் தேர்தலில் பிரசார நடவடிக்கைகள் அமைதியான முறையில் முன்னெடுக் கப்பட்டதுடன், வாக்காளர்களின் ஜனநாயக உரிமைக்கு மதிப்பளிக்கப்பட்டது. பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் சிறப்பாக இயங்கியதுடன், ஆணைக்குழுவுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான சீரான முறையில் ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் தேர்தலைத் திறம்பட நடத்துவதற்கு அவசியமான வளங்களின் பற்றாக்குறையொன்று நிலவியதை அவதானிக்கமுடிந்ததுடன், எதிர்வருங்காலங்களில் அதனை நிவர்த்தி செய்யக்கூடியவகையில் தேர்தல்கள் ஆணைக்குழு அதன் இயலுமையை மேம்படுத்திக்கொள்ளவேண்டும் – என்றார். (ச)


## தேவை


புடைவைக் கடைக்கு நன்கு அனுபவம் உள்ள பெண்கள் வேலைக்குத் தேவை. தகுந்த சம்பளம், மதிய உணவு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.

**இடம்:** கொக்குவில்

தொடர்புகளுக்கு: **076 363 5280**

(CS 56295) V-1


## மரண அறிவித்தல்



மலர்வு 05 . 06 . 1940

உதிர்வு 24 . 09 . 2024

### சுப்பிரமணியம் சிவப்பிரகாசம்

தொட்டிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் அவர்கள் நேற்று (24.09.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செல்லமுத்து தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரராஜசிங்கம், தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெயசோதரன் (கனடா), தவசீலன் (தொட்டிலடி), ஜெயறஞ்ஜினி (ஜேர்மனி), சிவகாந்தன் (ஜேர்மனி), மதுராஜினி (தொட்டிலடி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாஜினி (கனடா), விஜிதா (தொட்டிலடி), கஜேந்திரகுமார் (ஜேர்மனி), தாரணி (ஜேர்மனி), விஜயதாஸ் (தொட்டிலடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா - பிரதீப், மதனிகா, ஜெகிசனா, திவானுஜன், தக்ஷயா, சங்கீர்த், நிவேஜன், ஹர்சிகா, பிரவின், கஹுயா, சார்வின், சஜானா, வர்சிகா, தஸ்மிகா ஆகியோரின் அன்புப்பேரனாரும், ஆதியின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொட்டிலடி,
சங்கானை.

தகவல்:
**குடும்பத்தினர்.**
077 811 4405, 077 950 7299

(CS 56294) V-1


## வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு Champian Lane நந்தவிலில் புத்தம் புதிய வீடு விற்பனைக்கு.

- 2, 3/4 பரப்பு
- 4 அறைகள், 2 குளியலறைகள்
- சுற்று மதில்
- காணி பிரிக்கக்கூடிய நிலையில் உள்ளது.
- கட்டுக்கிணறும் உண்டு.

தொடர்புகளுக்கு:- **076 620 7597**

(CS/1403) J-1

## வீடு வாடகைக்கு தேவை

3 பேர் கொண்ட அரசாங்க வேலை செய்யும் சிறிய குடும்பத்திற்கு மானிப்பாய், ஆனைக்கோட்டை, சுதுமலை பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
**077 604 1412**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 24 . 02 . 1942

மறைவு 06 . 10 . 2023

### வயிரமுத்து சிவசுப்பிரமணியம் (ஐயா மனேச்சர்)

(கதிர்வேலர் பூவரசங்குளம் ஓமந்தை : வவுனியா)

ஆண்டு ஒன்று ஆனது ஐயா
மாநிலத்தில் நீங்கள் எமை பிரிந்து சென்று
தீராத துயரத்தில் தேம்புகின்றோம்
எங்களை ஆளாக்கிய அன்புத் தெய்வமே
ஓராண்டு ஆனாலும் உங்களின் நிழல்கள் அழியவில்லை
பாசத்தின் பிறப்பிடமாய் அன்பின் ஊற்றாய்
அள்ளி அணைத்த எங்கள் அன்புத் தெய்வமே
உங்களின் நினைவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல வீரசக்தி அம்மனை
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஓராண்டு நினைவு நாள் இன்று (25.09.2024) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

49/92 கோவில் வீதி,
குருமன்காடு, வவுனியா.

(CS/28449) J-1

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.